விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 165 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 19 வியாழக்கிழமை (02.06.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை



T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## மருத்துவமனையில் துமிந்த கைது



(கொழும்பு)

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டு ஜனாதிபதியின் பொதுமன்னிப்பில் விடுவிக்கப்பட்ட துமிந்த சில்வா ஸ்ரீ ஜயவர்த்தனபுர மருத்துவமனையில் சிகிச்சை 15

## யாழ். பொது நூலகம் எரிப்பு

### கொழும்பில் போராட்டம்




(கொழும்பு)

கொழும்பு காலி முகத்திடல் போராட்டக்களத்தில் யாழ். பொது நூலக எரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை முன்னெடுத் 15

## முன்னாள் பிரதமர் மகிந்தவை இந்தியாவுக்கு வருமாறு

### சுப்பிரமணியன் சுவாமி அழைப்பு

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை இந்தியாவிற்கு அழைக்கவுள்ளதாக பா.ஜ.க.வின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.

சுப்பிரமணியன் சுவாமி தனது டுவிட்டர் பதிவில் இதனை தெரிவித்துள்ளார்.

எனது நண்பரும் இலங்கை தலைவரு 15

## ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை கைதுசெய்ய உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை கைது செய்யுமாறு சட்டமா அதிபர் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். 15

## இறக்குமதி பொருட்களுக்கு 15-200 சதவீதம் வரை விலைகள் அதிகரிப்பு

### 369 பொருட்களுக்கான இறக்குமதி தடை நீக்கம்

*(கொழும்பு)*

**புதிய சிறப்புப் பொருள்கள் வரிவிதிப்பின் கீழ் அனைத்து இறக்குமதிகளின் விலைகளும் 15 முதல் 200 சதவீதம் வரை உயரும் என்று நிதி அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 369 பொருட்களுக்கான இறக்குமதி தடையும் நீக்கப்பட்டுள்ளது.**

கார்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளுக்கான டயர்கள் மீதான வரி 50 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளன.

வளிச்சீராக்கிகள் (A/C), சலவை இயந்திரங்கள், ரைஸ் குக்கர், மைக்ரோவேவ், குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் அலைபேசிகள் மீதான வரி 100 சதவீதத்தினால் உயர்வடைந்துள்ளன.

மின்சாதனங்கள்15 சதவீதம் உயர்ந்துள்ளன. 15

## சிகரெட், மதுபான விலைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

வற்வரி அதிகரிப்பின் காரணமாக சிகரெட், மதுபான விலைகள் இன்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதன்படி சிகரெட்டுக்களின் விலைகள் 5 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, 750 மில்லி லீற்றர் மதுபான போத்தல் ஒன்றின் விலை 520 ரூபாயினால், பியர் போத்தல் ஒன்றின் விலை 30 ரூபாயினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (ம)

## மின்சாரம் தாக்கியதில் 4 வயது சிறுமி பலி

### முழங்காவிலில் சம்பவம்



(முழங்காவில்)

முழங்காவிலில் மின்சாரம் தாக்கியதில் 4 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் முழங்காவில் வெள்ளாங்குளம் பகுதியைச் 15

## மன்னார், கொழும்பை சேர்ந்த மூவர் தமிழகத்தில் அடைக்கலம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்வரும் திங்கள் முதல் தனியார் பேருந்துகள் ஓடாது

### டீசல் தட்டுப்பாட்டையடுத்து அறிவிப்பு

(கொழும்பு)

பேருந்துகளுக்கு முறையான டீசல் கிடைக்காததால், எதிர்வரும் திங்கட்கிழமை முதல் அனைத்து தனியார் பேருந்துகளும் சேவையில் ஈடுபடாது என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு 15

## உரம் வழங்க இந்தியா இணக்கம்

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இந்திய கடன் திட்டத்தின் கீழ் யால பருவத்திற்கான உரங் 15

## அயல் வீட்டார் தாக்கியதாக பொலிஸில் முறைப்பாடு செய்த வயோதிப மாது

### வீடு திரும்பிய நிலையில் மரணம் கரவெட்டியில் சம்பவம்

(கரணவாய்)

அயல் வீட்டில் வசிப்பவர் தன்னை தாக்கியதாக நெல்லியடி பொலிஸ் 15

### பொருட்களை பதுக்குவோர் கைதாவர்

## அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்பவரிடம் கொள்வனவு செய்ய வேண்டாம்

### யாழ். மாவட்ட அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

பொது மக்கள் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலை [illegible] வைத்து அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்பவரிடம் பொருட்களை கொள்வனவு செய்வதை தவிர்க்க வேண்டும் என யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் தெரிவித்தார்.

நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் நடாத் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# NEW SCIENCE HALL
KANNATHIDDY ROAD, JAFFNA.

## 2024 A/L
கணித உயிரியல் பிரிவு

நேரடி வகுப்புக்கள், நிகழ்நிலை வகுப்புக்கள்

| தமிழ் மொழிமூலம் | ENGLISH MEDIUM |
| --- | --- |
| **PHYSICS**<br>திரு. G. பிரபா<br>திரு. N. கபிலன்<br>திரு. M. குகனேஸ்வரன்<br>திரு. S. சோதிலிங்கம் | **PHYSICS**<br>MR. M. KUGANESWARAN |
| **CHEMISTRY**<br>Mr. G. BENO<br>Mr. T. சுசாந்தன்<br>Mr. S.T. உமாசங்கர் | **CHEMISTRY**<br>MR. G. BENO |
| **BIOLOGY**<br>திரு. V.S. குணசீலன்<br>திரு. T. கெங்காதரன்<br>திரு. K. இராகவன் | **BIOLOGY**<br>MR. V.S. KUNASEELAN |
| **COM. MATHS**<br>திரு. P. செந்தில்நாதன்<br>திரு. S. சிவகரன் | **COM. MATHS**<br>MR. P. SENTHILNATHAN<br>MR. S. SIVAKARAN |

ஆரம்பம் : 05.06.2022
ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி

தொடர்புகளுக்கு
077 791 7611, 076 569 3006, 076 566 3006

(C-4413)


# பாராளுமன்ற விசேட கூட்டம் இன்று

(கொழும்பு)

பாராளுமன்ற விவகாரங்கள் பற்றிய குழுவின் விஷேட கூட்டம் ஒன்று இன்று முற்பகல் இடம்பெறவுள்ளது.

இதன்போது, பாராளுமன்றத்தின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது.

இதுதவிர,பாராளுமன்ற உறுப்பினர்களின் உணவு வேளை தொடர்பிலும் இதன்போது தீர்மானம் ஒன்று எட்டப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-60)


# IELTS
DMI COMPUTER EDUCATION
0777 17 35 17

#Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 16)

Academic or General

IELTS Life Skills - A1
திருமணம் செய்து UK செல்வோருக்கானது

DMI , British Council இன்
அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்
DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH நேரடி வகுப்புக்களாக

புதிய பிரிவு ஆரம்பம் 4/6/2022 Sat 9:30 am

German - Germany ,Swiss நாட்டுக்கு செல்வோருக்கு Deuctsch
French - France நாட்டுக்கு செல்வோருக்கு (C-4411)

DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கன்னாதிட்டி வீதி 0777 24 07 07 021 222 4403

021 226 2470 0777577333 | 021 227 0775 0777227074 | 021 224 1970 0776032300 | 021 225 6665 0761354503 | 021 228 5655 0776398096



# Pearson International College

Applications are called for IELTS tutors

- Candidates should have minimum HND in English or anu other undergraduate in English medium
- Previous IELTS score above or equal to 6.5 is recommended (not mandatory)
- Prior teaching experience would be an added advantage
- Should be able to work during week days

Email your CV within three days of this advertisement to pearsoncollege2020@gamil.com

Call +94 74 188 7878 for more info

(11704)

No.21, 3rd Lane, Power house Road, Jaffna.


# மரண அறிவித்தல்



பிறப்பு 20 . 03 . 1956

இறப்பு 31 . 05 . 2022

## திருமதி சிவனேசன் சோதிமலர்

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவனேசன் சோதிமலர் (மாமனிதர் சிவனேசன் அறக்கட்டளை நிறுவுனர்) அவர்கள் 31.05.2022 அன்று பி.ப 7.30 மணியளவில் இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சின்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான கிட்டினன் - ஆழ்வியம்மா தம்பதிகளின் மருமகளும் மாமனிதர் கி.சிவனேசனின் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், பொது முகாமையாளர் - வட மாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் பேரிணையம்) அன்பு மனைவியும் திருக்குமார், கோபாலகுமார், தாட்சாயினி, தருக்சனி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சோதிதாஸ் மற்றும் முரளிதாஸ், கோகிலாமலர், கமலதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் குலசேகரன், கருணாகரன், விஜயலட்சுமி, தனலட்சுமி, விஜி, மனோகரன், சுசிகலா ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2022) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00 மணியளவில் சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.பே:-
021 226 4145

(C-4412)

தகவல்:
குடும்பத்தினர்


# NEW SCIENCE WORLD

கணித, விஞ்ஞானப் பிரிவுகள்
Tamil and English Medium

## 2024 A/L

ஆரம்பம் : 05.06.2022 (ஞாயிறு)
நேரம் : 10.15 am

**பௌதிகவியல்**
திரு.R.குமரன், திரு.R.குகன்

**இரசாயனவியல்**
திரு.டயஸ், திரு.K.T.சிவகுமார்

**உயிரியல்**
திரு.N.T.கஜேந்திரன்

**இணை.கணிதம்**
திரு.S.S.செந்தில்ராஜ், திரு.V.ஹரிகரன்

அனுமதிகளை 05.06.2022 அன்று
காலை 6 மணியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்

(C-4415)

மேலதிக விபரங்களுக்கு
221 6690, 077 336 4055,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சந்தையில் உச்சம் தொடும் எண்ணெய் விலை

(கொழும்பு)

**ஐரோப்பாவுக்கான ரஷ்யாவின் எண்ணெய் இறக்குமதியை மூன்றில் இரண்டு பங்காகக் குறைக்கும் திட்டத்திற்கு ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் நேற்று முன்தினம் உடன்பட்ட நிலையில், உலக சந்தையில் எண்ணெய் விலை நேற்று புதிய உச்சத்தை தொட்டுள்ளது.**

உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்புக்குப் பின்னர் எண்ணெய் மற்றும் எரிவாயு விலைகள் தொடர்ந்தும் உயர்ந்து வரும் நிலையில், நேற்று புதிய விலையேற்றம் பதிவாகியுள்ளது. நேற்றைய நிலவரப்படி, ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை 123 டொலரை தாண்டியுள்ளது.

இந்த விலையேற்றம் இரண்டு மாதங்களில் இல்லாத அளவுக்கான அதிகவிலை உயர்வாகும். இன்றைய புதிய விலையேற்றத்தால் நுகர்வோர் மீது புதிய அழுத்தம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குள் இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெயில் ரஷ்யா 27 வீதத்தையும் அதே போல எரிவாயுவில் 40 வீதத்தையும் பிடித்து வருகிறது.

இந்த இறக்குமதிகளுக்காக ஐரோப்பிய ஒன்றியம் ரஷ்யாவிற்கு வருடாந்தம் சுமார் 400 பில்லியன் யூரோவை செலுத்தும் நிலையில் இந்தப் பணம் உக்ரைன் மீதான போருக்கு செல்கிறது.

இதனால் ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களால் ரஷ்ய எண்ணெய் இறக்குமதிக்கும் தடைவிதிக்க முயல்வது குறிப்பிடத்தக்கது. (நி)

## துமிந்தவின் பொது மன்னிப்பை இடைநிறுத்தும் நீதிமன்ற உத்தரவு

### வரலாற்று முக்கித்துவம் வாய்ந்தது என்கிறார் சுமந்திரன்



(கொழும்பு)

மரண தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்ட பொது மன்னிப்பை இடைநிறுத்தி உயர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளமை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு என பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி வழங்கிய பொது மன்னிப்பை இடைநிறுத்தியதுடன், துமிந்த சில்வாவை கைது செய்யுமாறும் உயர் நீதிமன்றம் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்றதும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரதலக்ஷ்மன் பிரேமசந்திரவை கொலை செய்த குற்றத்துக்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட துமிந்த சில்வாவுக்கு பொது மன்னிப்பு வழங்கி சிறையிலிருந்து விடுவித்தார்.

அவர் விடுதலை செய்யப்பட்டதற்கு எதிராக பாரதலக்ஷ்மன் பிரேமசந்திரவின் மனைவி மற்றும் மகளான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா ஆகியோரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில், அந்த வழக்கை விசாரணை செய்த நீதிமன்றம் ஜனாதிபதியின் பொது மன்னிப்பை இடைநிறுத்தி இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதேவேளை, கடந்த மே 9 ஆம் திகதி இலங்கையில் நடைபெற்ற கலவரங்களின் போது துமிந்த சில்வா சிங்கப்பூருக்கு தப்பிச்சென்றார். அதன் பின்னர் அவர் மீண்டும் நாடு திரும்பியதாக தகவல்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

## நெருக்கடி நேரத்தில் உதவிய பங்களாதேஷ்



(கொழும்பு)

பங்களாதேஷ் 2.2 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான அத்தியாவசிய மருந்துகளை வழங்குவதன் மூலம் இலங்கை மீதான தனது உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் 2.2 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான அத்தியாவசிய மருந்துப் பொருட்களை சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் நேற்று கையளித்ததாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நன்கொடையில் புற்றுநோய் எதிர்ப்பு, உயர் இரத்த அழுத்த எதிர்ப்பு, அண்டிபயாடிக் வாய்வழி மற்றும் ஊசி மருந்துகள், வைரஸ் எதிர்ப்பு, வலிப்பு எதிர்ப்பு மற்றும் ஆஸ்துமா எதிர்ப்பு மருந்துகள் உட்பட 79 அத்தியாவசிய மருந்துகள் உள்ளன. (நி)

## 500 மில்லியன் யுவான் மானியமாக வழங்கிய சீனா

(கொழும்பு)

சீன அரசாங்கத்தால் 500 மில்லியன் யுவான் மானியமாக வழங்க உள்ளதாகவும், அதன் முதல் தொகுதி நாளை வெள்ளிக்கிழமை நாட்டிற்கு வரும் என கொழும்பில் உள்ள சீன தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கை அதிகாரிகளால் அனுப்பப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக, இலங்கைக்குத்- தேவையான வாழ்வாதார உதவிகளை வழங்க பிரதமர் லீ கெகியாங் நடவடிக்கை எடுத்துள்ளதாக சீன தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது. (நி)

## அத்தியாவசிய மருந்துகளை விரைவில் இறக்குமதி செய்யுங்கள்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அவசர கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் பற்றாக் குறையாக உள்ள அத்தியாவசிய மருந்துகளை விரைவில் இறக்குமதி செய்யாவிட்டால் எதிர்காலத்தில் பல பிரச்சினைகள் ஏற்படும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது 12 முதல் 20 வரை அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் அத்தோடு, 120 முதல் 150 வரை அத்தியாவசியமற்ற மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் மருத்துவர் சமின் விஜேசிங்க தெரிவித்தார். (நி)

## இலங்கையின் பணவீக்கம் மேலும் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையின் பணவீக்கம் மேலும் அதிகரித்துள்ளது.

இலங்கையில் அரச ஊழியர்களுக்கு சம்பளத்தை வழங்குவதற்கு மேலும் ஒரு ரில்லியன் ரூபாய் பணத்தை அச்சடிக்கப் போவதாக அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், மே மாதத்திற்கான பணவீக்கமானது 39.1 வீதமாக உயர்வடைந்துள்ளது.

அதேசமயம், மே மாதத்தில் உணவுப் பணவீக்கம் 57.4 சதவீதமாக பதிவாகியுள்ளதுடன், மே மாதத்தில் உணவு அல்லாத பணவீக்கம் 30.6 சதவீதமாக உயர்ந்துள்ளது. (நி)

## அரசியல் கட்சிகளுக்கு தேர்தல்கள் ஆணைக்கு அழைப்பு

(கொழும்பு)

தேர்தல் ஆணைக்குழுவில் இடம்பெறும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அனைத்து அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமைகளில் உரிய சீர்திருத்தங்களை கண்டறிந்து தேவையான திருத்தங்களை பரிந்துரைப்பதற்காக அவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி எதிர்வரும் 6ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவில் கூட்டம் நடைபெறவுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தீர்மானங்களை விரைந்து நிறைவேற்றுவதற்கு தேவையான ஆதரவை அரசியல் கட்சிகளிடம் இருந்து பெறுவதே கூட்டத்தின் நோக்கம் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.,

மேலும், 2022 தேர்தல் சீர்திருத்த செயல்முறையின் தற்போதைய நிலை குறித்து கட்சியின் செயலாளர்களுக்கு விளக்கமளிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வல்வை விளையாட்டுக்கழகம் தனது வைரவிழாவினை முன்னிட்டும் மறைந்த வீரர்கள் ஞாபகார்த்தமாகவும் நடத்தும் 9 நபர் கொண்ட மாபெரும் வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்ட போட்டியின் நேற்றைய லீக் முதலாவது போட்டியில் குருநகர்பாடும்மீன் வி.க எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் வி.க மோதியது இப்போட்டியில் 2-0 என்ற கணக்கில் பாடும்மீன் வி.க வெற்றி பெற்றது. சாந்தன் மற்றும் லியோ அணிக்காக தலா ஒரு கோலினை பெற்றுக் கொடுத்தனர் போட்டியின் ஆட்டநா்யகனாக சாந்தன் தெரிவு செய்யப்பட்டார்.

(படம் - ஏனெஸ்ட்)

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி ஞானமுருகன் அணி சம்பியன்



உரும்பிராய் திருக்குமரன் அக்கடமியினால் வட மாகாண ரீதியாக நடத்தப்பட்ட 13 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் ஞான முருகன் அக்கடமி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. இதன் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் திருக்குமரன் அக்கடமி மைதானத்தில் நடைபெற்றது.

வட மாகாணத்தில் முதன் முறையாக நடத்தப்பட்ட இத். தொடரில் வடமாகாண த்தைச் சேர்ந்த 12 அக்கடமிகளின் 17 அணிகள் பங்கு பற்றின.

இதன் இறுதியாட்டத்தில் உரும்பிராய் திருக்குமரன் அக்கடமி அணியை எதிர்த்து ஞானமுருகன் அக்கடமி அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் இறுதிவரை இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் முகமாக விளையாடினர்.

இதனால் இரு அணிகளும் ஆட்ட நேர முடிவில் 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலை வகித்தனர்.

இதனால் சம நிலை தவிர்ப்பு உதைமூலம் வெற்றி. தோல்வி தீர்மானிக் கப்பட்டது.

இதில் ஞானமுருகன் அக்கடமி அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர். 3 ஆம் இடத்தை ஹென்றிஸ் அக்கடமி அணி பெற்றது. (4-90)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 04.05.2022 புதன்கிழமை சிவபதமடைந்த

அமரர் திருமதி **நேசமலர் ஆனந்தராஜா**



அவர்களின்

அந்தியேட்டிக் கிரியைகள் 01.06.2022 புதன்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் 03.06.2022 வெள்ளிக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் சோடாக்கொம்பனி ஒழுங்கை மல்லாகத்திலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய திருமண மண்டபத்தில் இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சோடாக் கொம்பனி ஒழுங்கை,
மல்லாகம்

**குடும்பத்தினர்**

(C-4414)

தில்லையம்பதியாள் துணை

## சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் ஈழத்து தில்லையம்பதி

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்

## நாற்பத்தேழாவது ஆண்டு

## வசந்த வைகாசி மகோற்ஷவ பெருந்திருவிழா - 2022



03.06.2022 வெள்ளி முற்பகல் 10.00 மணிக்கு கொடியேற்றம்
05.06.2022 ஞாயிறு இரவு 7.30 மணிக்கு அன்னச்சப்பறம்
07.06.2022 செவ்வாய் இரவு 7.30 மணிக்கு பூச்சப்பறம்
08.06.2022 புதன் இரவு 7.30 மணிக்கு வசந்த உற்சவம்
09.06.2022 வியாழன் இரவு 7.30 மணிக்கு கைலாசவாகனம்
12.06.2022 ஞாயிறு பிற்பகல் 2.00 மணிக்கு வேட்டைத்திருவிழா
(ஸ்ரீஞான வைரவர் ஆலயம்)
12.06.2022 ஞாயிறு இரவு 7.30 மணிக்கு சப்பறத்திருவிழா
13.06.2022 திங்கள் முற்பகல் 10.00 மணிக்கு ரத உற்சவம்
14.06.2022 செவ்வாய் முற்பகல் 10.00 மணிக்கு பூரணை தீர்த்தோற்சவம்
15.06.2022 புதன் இரவு 7.30 மணிக்கு பூங்காவனத் திருவிழா
16.06.2022 வியாழன் காலை 6.00 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகம்
16.06.2022 வியாழன் இரவு 7.00 மணிக்கு வயிரவர் மடை
20.06.2022 திங்கள் பி.ப 3.00 மணிக்கு வைகாசி பொங்கல் விழா

### தினசரி உற்சவம்

காலை 6.30 மணிக்கு அபிஷேகம், காலை 8.00 மணிக்கு மூலஸ்தான பூஜை, முற்பகல் 9 மணிக்கு ஸ்தம்ப பூஜை, 9.30 மணிக்கு வசந்தமண்டப பூஜை, முற்பகல் 10.30 மணிக்கு அம்பாள் வீதி உலாவரும் காட்சி, மாலை 5.00 மணிக்கு சாயரட்சை பூஜை, மாலை 5.30 மணிக்கு ஸ்தம்ப பூஜை, 6.30 மணிக்கு வசந்தமண்டப பூஜை, இரவு 7.30 மணிக்கு, அம்பாள் வீதி உலாவரும் காட்சி

**மகோற்சவ பிரதமகுரு**
சிவகாம கிரியாபூஷணம், சிவகாம கிரியா கலாநிதி
சிவப்பிரம்மஸ்ரீ யோகி சிவயோகராஜன் குருக்கள்

**திருக்கோயில் நித்திய பூசகர்**
பிரம்மஸ்ரீ புவனேந்திர ரிஷிகேசசர்மா
(தில்லையம்பதி)

மகோற்ஷவத்தை முன்னிட்டு தினமும் [illegible] அன்னதானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்

ஈழத்து தில்லையம்பதி "தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே சரணம்" திருக்கோயில் பரிபாலன சபை

(C-4417)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்படும் சிறுவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் உணவுத்தட்டுப்பாடு காரணமாக சிறுவர்கள் மத்தியில் ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்து வருவதாக, கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் குழந்தைகள் நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.**

கடந்த சில நாட்களாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 53 குழந்தைகளில் 11 பேர் ஊட்டச்சத்து குறைபாடுடையவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் இருந்து தத்தமது குழந்தைகளை காப்பாற்ற பெற்றோர்கள் வீட்டுத்தோட்ட செய்கையில் அதிக கவனம் செலுத்துவதுடன், குறுகிய காலத்தில் விளையக்கூடிய சத்துமிக்க உணவு வகைகளை பயிரிடுவதில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், அண்மைய நாட்களில் 100 இற்கும் அதிகமான நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (நி)

# இலங்கை நிதியுதவி பெற வேறொரு நாடு பிணை நிற்க வேண்டும்

## இலங்கை வரலாற்றில் இப்படி நிலமை இருந்ததில்லை என்கிறார் ஹர்ஷ

(கொழும்பு)

இலங்கைக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அடுத்த சில மாதங்களுக்கு தேவையான நிதி உதவிகளை பெறுவதென்றால், வேறு ஒரு நாடு இலங்கைக்காக பிணையாக வேண்டிய அளவிற்கு நாடு வீழ்ச்சியடைந்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வரலாற்றில் இவ்வாறானதொரு நிலைமை ஒரு போதும் ஏற்பட்டதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான கடன்களை பெறுவதற்கு வேறு நாடு இலங்கைக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும் என உலக வங்கி ஏற்கனவே கூறியுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# சமுர்த்தி பயனாளிகளுக்கான கொடுப்பனவு அதிகரிப்பு

## யாழ்.அரச அதிபர் மகேசன்



(யாழ்ப்பாணம்)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையினைக் கருத்திற் கொண்டு யாழ்.மாவட்டத்தில் சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிற்கு நிவாரண உதவி வழங்கல் தொடர்பாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஊடக அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையினைக் கருத்தில் கொண்டு உலக வங்கியின் நிதி உதவியுடன் மூன்று மாதங்களுக்கு சமுர்த்தி நிவாரண உதவிக் கொடுப்பனவிற்கு மேலதிகமாக நிதிக்கொடுப்பனவு ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்படவுள்ளது.

அந்த வகையில், 1 தொடக்கம் 2 அங்கத்தவர்களுக்கு இது வரை வழங்கப்பட்டு வந்த 1900 ரூபா கொடுப்பனவு 3100 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 5000 ரூபாவாக வ்ழங்கப்படும். 3 அங்கத்தவர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த 3200 ரூபா கொடுப்பனவு 3100 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 6300 ரூபாவாக வழங்கப்படும். நான்கிற்கும் மேற்பட்ட அங்கத்தவர்களுக்கு இது வரை வழங்கப்பட்டு வந்த 4500 ரூபா கொடுப்பனவு 3000 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 7500 ரூபாவாக வழங்கப்படும்.

மேலும் குறைந்த வருமானம் பெறுகின்ற சமுர்த்தி நிவாரணம் பெறத் தகுதியான காத்திருப்புப் பட்டியலில் உள்ள 27,978 குடும்பங்களிற்கு மூன்று மாதாங்களிற்கு 5000 ரூபா நிதி கொடுப்பனவு சமுர்த்தி வங்கிகளினால் வழங்குவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-18-33)



சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தினால் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் புற்றுநோயாளர் சிகிச்சைப் பிரிவுக்கு அவசியத் தேவையான மருந்துப் பொருட்களின் இரண்டாவது தொகுதி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மேற்படி சிகிச்சைப் பிரிவின் மருத்துவ நிபுணர் கிருஷாந்தி ராஜசூரியரிடம் கையளிக்கப்பட்டது. (படம்:-ரவிசாந்)


# கண்ணீர் அஞ்சலி

அமரர்.வேலன் பாலகிருஸ்ணன்

பிறப்பு- 08.02.1939 இறப்பு- 31.05.2022



எமது சங்கத் தலைவரும் வலிகாமம் கல்வி வலய தொழில்நுட்ப உத்தியோகத்தருமாகிய திரு.பா.சுபாஸ்கரன் அவர்களின் அன்புத் தந்தை அமரர்.வேலன் பாலகிருஸ்ணன் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கம், வடமாகாணம்.


# இராசிபலன்

02.06.2022
வைகாசி 19, வியாழக்கிழமை
திருதியை முன்னிரவு 10.51 மணிவரை

திருவாதிரை பிற்பகல் 3.06 மணிவரை
சுபநேரம் 7.22-8.52 மணிவரை
இராகுகாலம் 1.22-2.52 மணிவரை

சந்திராஷ்டமம் - அனுசம், கேட்டை

வளவன்

**மேஷம்** – கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**கடகம்** – பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், அலைச்சல்களால் மனச்சோர்வு ஏற்படலாம்.

**துலாம்** – எதிர்பாராத சில சம்பவங்கள் நடைபெறும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** – உறவினர் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** – அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்** – தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்** – உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் நிலை ஏற்படலாம், மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், வரவும் செலவும் சமமாகும் நாள்.

**கும்பம்** – பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** – எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.

**கன்னி** – அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், திறமைகள் வெளிப்படும் நாள், நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், ஆரோக்கியமான நாள்.

**தனுசு** – குடும்பத்தினரிடையே குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும்.

**மீனம்** – மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பேச்சில் கனிவு பிறக்கும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டு வீர்கள், வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள்.

புகழ்ச்சி நல்லவனை மேலும் நல்லவனாக்கும், கெட்டவனை மேலும் கெட்டவனாக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்களை குறிவைக்கும் குரங்குஅம்மை நோய்!

## யாழ். போதனா மகப்பேற்று மருத்துவ நிபுணர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**உலக நாடுகளில் தற்போது பரவி வரும் குரங்கு அம்மை நோயானது கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களை வேகமாகத் தாக்கும் என யாழ். போதனா மருத்துவமனையின் நோயியல் மகப் பேற்று மருத்துவ நிபுணர் அ.சிறீதரன் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை யாழ். போதனா மருத்துவமனையின் மருத் துவ சங்கம் ஏற்பாடு செய்த குரங்கு அம்மை நோய் தொட ர்பில் விழிப்பூட்டும் ஊடகவி யலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கருத்து தெரி வித்தார்.

இலங்கையில் கொரோனா தாக்கத்தின் போது கர்ப்பிணிப் பெண்கள் பலர் உயிரிழந்த நிலையில் குரங்கு அம்மை நோய் தொடர்பில் நாம் விழிப் பாக இருக்க வேண்டும்.

கர்ப்பிணி தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்களின் நோய்எதிர்ப்பு சக்தியானது குறைவாக காணப்படுமிடத்து குரங்கு அம்மை நோயானது விரைவாக அவர்களை தாக்கக் கூடிய சூழ்நிலை உள்ளது.

குழந்தை தாயின் வயிற் றில் இருக்கும் போது தொப் புள் கொடி வழியாக குறித்த நோயா னது குழந்தைக்கும் பரவும்.

இதனை தடுப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என நாம் நோக்கும் போது பெரியம்மை நோய் ,குரங்கு அம்மை நோய் இரண்டும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை.

குறித்த நோயானது தொடுகை, சுவாசம் போன்ற வற்றினால் பரவும் நிலையில் காணப்படு வதால் கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய் மார்கள் இர ண்டு விடயங்களிலும் அவதா னமாக இருக்க வேண்டும்.

இலங்கையில் 1980 ஆம் ஆண்டு பெரியம்மை நோய் முழுமையாக கட்டுப்படுத்துவ தற்கு தடுப்பூசி வழங்கிய மையே பிரதான காரணம்.

பெரியம்மை நோய்க்கு வழங்கப்படுகின்ற மூன்றாவது தடுப்பூசியை குரங்கு அம்மை நோய் அறிகுறி உள்ளவர்க ளுக்கு செலுத்த முடியும்.

ஆகவே குரங்கு அம்மை நோய் தொடர்பில் நாம் விழிப் பாகவும் முன்னெச்சரிக்கை சுகாதார பாதுகாப்பு நடவடிக்கை களை மேற்கொள்வது அனை வருடைய பொறுப்பாகும் என அவர் தெரிவித்தார். (4-104)

# மூத்த எழுத்தாளர் தெணியானுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

அண்மையில் காலமாகிய, சமூக ஒடுக்குமுறைகளை எதிர் ப்பதில் முன்நின்ற முற்போக்கு எழுத்தாளரும் ஈழத்தின் புகழ் பெற்ற எழுத்தாளுமைகளுள் குறிப் பிடத் தக்கவருமான தெணியானின் அஞ்சலி நிகழ்வு எதிர்வரும் 05 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

எழுத்தாளர் மு.அநாதரட் சகனின் தலைமையில் இடம் பெறவுள்ள இந் நிகழ்வில் அஞ்சலி உரைகளை எழுத்தா ளர் க.தணிகாசலம், ஆய்வாளர் கலாநிதி சு.குணே ஸ்வரன், யாழ். பல்கலைக்கழ கத்தின் சிரேஷ்ட விரிவுரை யாளர் இ.இராஜேஸ்கண் ணன், ஆய்வாளர் கலாநிதி ந.இரவீந்திரன், எழுத்தாளர் சட்டத்தரணி சோ.தேவராஜா, எழுத்தாளர் ஐ.சாந்தன், பொது வுடமைச் செயற்பாட்டாளர் சி.கா.செந்திவேல் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (4)

# 138 மருத்துவ அதிகாரிகள் வடக்கிற்கு நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திற்கு 138 மருத்துவ அதிகாரிகள் நியமிக் கப்பட்டுள்ள நிலையில் 132 பேர் இதுவரை தமது கடமை களைப் பொறுப்பேற்றுள்ளார்கள் என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மரு த்துவ கலாநிதி ஆ.கேதீஸ் வரன் தெரிவித்தார்.

மருத்துவ அதிகாரிகள் நியமனம் தொடர்பாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ் விடயம் தெரிவிக்கப்பட்டுள் ளது.

மேலும் அந்த அறிக்கை யில்,மத்திய சுகாதார அமைச் சினால் உள்ளக பயிற்சியை நிறைவுசெய்த மருத்துவ அதிகாரிகளுக்கு கடந்த மே மாதம் 30ஆம் திகதி முதல் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதில் வடமாகாணத்திற்கு 138 பேர் நியமிக்கப்பட்டுள் ளார்கள். இவர்களில் 132 பேர் இதுவரை தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்கள்.

இதில் யாழ் .மாவட்டத்திற்கு 23 பேரும் கிளிநொச்சி மாவ ட்டத்திற்கு 22 பேரும் வவு னியா மாவட்டத்திற்கு 22 பேரும் மன்னார் மாவட்டத் திற்கு 35 பேரும் முல்லை த்தீவு மாவட்டத்திற்கு 31 பேரும் கடமைகளைப் பொறுப் பேற்றுள்ளார்கள் என குறிப் பிடப்பட்டது. (4-33)

# நள்ளிரவு வீடு புகுந்து தங்க நகைகள் திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தனங்கிளப்பு பகுதியில் உள்ள வீடொன்றில் கடந்த திங்கட்கிழமை இரவு வேளையில் தங்க நகைகள் திருடப்பட்டிருப்பதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டில் அனைவரும் தூக்கத்தில் இருந்த வேளை யில் வீடு புகுந்த கொள்ளை யர்கள் வீட்டில் இருந்த மற்றும் உடலில் அணிந்திருந்த நகை களை கொள்ளையிட்டுச் சென் றிருப்பதாகத் தெரிவிக்கப்படு கிறது.

இத் திருட்டுச் சம்பவம் தொடர்பான மேலதிக விசார ணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வரு கின்றனர். (4-30)

# தந்தையின் கொடூர தாக்குதலில் 5 வயது சிறுமியின் கை முறிவு

## மருத்துவமனையில் அனுமதி

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரி விற்குட்பட்ட கெற்பேலி மேற்கு மிருசுவில் பகுதியைச் சேர்ந்த 5வயதுச் சிறுமிஒருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு தனது தந்தையின் தாக் குதலுக்கு இலக்காகி கை முறிந்த நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட் டுள்ளார்.

இது குறித்த மேலும் தெரிய வருவதாவது

சிறுமியின் தாய் வீட்டில் இல்லாத சமயம் மதுபோதை யில் வந்த தந்தை தனது 5 வயதுச் சிறுமி மீது காட்டு மிரா ண்டித்தனமாக தாக்குதல் நடத்தியுள்ளார்.

இதன்போது சிறுமி கை உடைந்த நிலையில் சாவ கச்சேரி ஆதார மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சை க்காக யாழ். போதனா மருத் துவமனைக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளார்.

குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பான மேலதிக விசார ணைகளை கொடிகாமப் பொலி ஸார் முன்னெடுத்து வரு கின்றனர். (4-30)

# நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி தடங்கன் புளி யடி முருகமூர்த்தி ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகவுள்ளது.

அந்தவகையில் எதிர்வரும் 13 ஆம் திகதி காலை 9 மணி க்கு தேர்த்திருவிழாவும் மறு நாள் காலை 10 மணிக்கு தீர்த் தத் திருவிழாவும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையி னர் அறிவித்துள்ளனர். (4-60)




தெற்காசியாவின் அறிவுக் களஞ்சியமாகப் போற்றப்பட்ட யாழ்ப்பாணப் பொதுநூலகம் தீயிட்டு எரிக்கப்பட்டமையின் 41 ஆவது ஆண்டு நினை வேந்தல் நிகழ்வு யாழ். மாநகர சபையின் ஏற்பாட் டில் நேற்றுச் செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணப் பொதுநூலகத்தில் நடை பெற்றது. (படம்-ரவிசாந்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஞானசாரதேரருக்கு எதிரான

## குர்ஆன் அவமதிப்பு வழக்கு மீண்டும் விசாரணைக்கு

(கொழும்பு)

குற்றவியல் தண்டனை சட்டத்தின் 291A4 சரத்தின் கீழ் பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக வழக்கை தொடருமாறு சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் குற்றத் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் நேற்று முன்தினம் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் இதனை தெரியப்படுத்தியுள்ளனர்.

மத உணர்வுகளை பாதிக்கும் கருத்தை வெளியிட்டுள்ளதாக ஞானசார தேரருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அதற்கமைய அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு பத்திரம் தாக்கல் செய்யப்படவுள்ளது. கடந்த 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதி ஞானசார தேரர் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தி இருந்தார். அதில் இஸ்லாமிய புனித நூலான புனித அல் குர் ஆனை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சீரற்ற காலநிலை காரணமாக ஒருவர் உயிரிழப்பு

## 144 குடும்பங்கள் பாதிப்பு



(இரத்தினபுரி)

நாட்டின் பல பகுதிகளில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர் இரத்தினபுரி- கிரியெல்ல பிரதேசத்தில் நிவாரணப் பணியில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மேலும் சீரற்ற காலநிலையினால் 6 மாவட்டங்களில் 144 குடும்பங்களைச் சேர்ந்த 576 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். (நி)

## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்
## 2022 ஆம் ஆண்டிற்கான மீள்கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் இறைச்சிக்கடைகள். ஜூன் தொடக்கம் டிசெம்பர் வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் :06.06.2022-19.06.2022 பிற்பகல் 2.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி: 20.06.2022 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிவரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :20.06.2022 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :கலந்துரையாடல் மண்டபம், தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேசசபை.

2022 ஆம் ஆண்டுக்கான இறைச்சிக் கடைகளுக்கான குத்தகை அட்டவணை

| இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| நல்லூர் உப அலுவலகம் | | | | |
| 1 | திருநெல்வேலிச் சந்தை கோழியிறைச்சிக் கடை இல 01. | 500.00 | 5,000.00 | 50,531.25 |
| 2 | திருநெல்வேலிச் சந்தை கோழியிறைச்சிக் கடை இல 02. | 500.00 | 5,000.00 | 63,868.75 |
| கொக்குவில் உப அலுவலகம் | | | | |
| 3 | கொக்குவில் சந்தை கோழியிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 185,625.00 |
| 4 | கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக் கடை இல 02 | 500.00 | 5,000.00 | 58,827.08 |
| 5 | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 775,637.00 |
| 6 | கோண்டாவில் ஸ்ரேசனடி மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 5,000.00 | 366,758.00 |

1. கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளை தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5, கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு, தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். மூன்றாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். காலம்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும்.
2. மீளளிக்கப்படாத படிவக்கட்டணம் மற்றும் மீளளிக்கப்படக் கூடிய வைப்புப் பணம் என்பவற்றை செலுத்தி கேள்விப் பத்திரங்களை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையையும் கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழையும் கொண்டு வருதல் வேண்டும்.
3. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
4. கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
5. கேள்வி தொடர்பான மேலதிக நிபந்தனைகள் மற்றும் விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் முற்பகல் 9.00-பிற்பகல் 3.00 பார்வையிடலாம்.

**திரு.ப.மயூரன், தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.** (c-4407)

# பொதுத் தேர்தல் ஊடாகவே பிரச்சினைக்குத் தீர்வு

## அநுர

(கொழும்பு)

பொதுத்தேர்தல்ஒன்றை நடத்துவதன் ஊடாகவே, நாட்டின் அரசியல் -பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வினைக் காண முடியும் என ஜே.வி.பி. யின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கடவத்தையில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"கொழும்பு துறைமுக நகரங்கள் 45ஐ செய்யும் அளவுக்கு நாட்டில் கடன் சுமை ஏற்பட்டுள்ளது. எடுத்த கடனுக்கான வட்டியையும் நாம் செலுத்த வேண்டும்.

இதற்காக மேலும் கடனைப்பெற வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இவையனைத்திற்கும் டொலர் அவசியமாகும். அரசாங்கம் இன்று அனைத்து செயற்பாடுகளையும் நிறுத்தியுள்ளது. இந்தப் பிரச்சினை பிரதமர் பதவியில் மாற்றத்தை ஏற்படுத்தி, ரணிலைக் கொண்டுவந்தால் மட்டும், தீர்ந்துவிடப் போகின்றதா?

இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க பொதுத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும். ரணிலுக்கு பாராளுமன்றிலும் சரி, வெளியிலும் சரி பலம் கிடையாது. அவர் ஒரு தனி நபர்.

ஆனால், ராஜபக்ஷக்களைப் பாதுகாக்க அவர் சிறந்தவர். ரணில் விக்கிரமசிங்கவினால் தான் ராஜபக்ஷக்கள் காப்பாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அவரை பிரதமராக நியமிக்க பொருளாதார காரணமும் அரசியல் காரணமும் உள்ளது. இவ்வாறான அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: உத்திராடம் 4
கி.பா:29 சூரி 12 செவ் 2 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L பிரான்ஸ் PR இல்லை
எதிர்பார்ப்பு:நற்பண்புள்ள பெண்
தொ.இ: B/10108

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்:திருகோணம்
கி.பா:32 சூரி 11 செவ் 10 இல்
உயரம்:5'7"
தகைமை/தொழில்: A/L சொந்தக்கடை
எதிர்பார்ப்பு: காரைநகர் விரும்பத்தக்கது
தொ.இ: B/10110

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 3
கி.பா:11 ½ சூரி 9 செவ் 2 இல்
தகைமை/ தொழில்: மின்சாரம் சம்மந்தப்பட்டவேலை
எதிர்பார்ப்பு: சாதாரணபடித்த பெண்
தொ.இ: B/10113

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம் : மிருகசீரிடம் 4
கி.பா:சூரி 10 செவ் 11 இல்
உயரம்:5'8"
தகைமை/தொழில்: BSc ஆசிரியர்
எதிர்பார்ப்பு :அரச தொழில் ஆசிரியர் விரும்பத்தக்கது.
தொ.இ: B/10122

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 2
கி.பா: 2 ¾ சூரி .செவ் 10 இல்
உயரம்:5'3"
தகைமை/தொழில்:BA பட்டதாரி
எதிர்பார்ப்பு: பட்டதாரி தொழில்புரிபவர்
தொ.இ:G/10115

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம் : கேட்டை 2
கி.பா:5 சூரி 10 செவ் 11 இல்
உயரம்: 160cm
தகைமை/தொழில்:BSc. SLAS உதவி பிரதேச செயலாளர்
எதிர்பார்ப்பு: படித்த உத்தியோகம்
தொ.இ: G/10125

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: கேட்டை 3
கி.பா: 48 சூரி 12 செவ் 7இல்
உயரம் : 5'4"
தகைமை/தொழில்:Software QA Engineer
எதிர்பார்ப்பு: கொழும்பில் வேலைசெய்பவர்
தொ.இ:G/10162

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி 1
கி.பா:23 சூரி 10 செவ் 11 இல்
உயரம் : 163 cm
தகைமை/தொழில்:வைத்தியர்
எதிர்பார்ப்பு: வைத்தியர் மட்டும்
தொ.இ:G/10166

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



# உளமார வாழ்த்துகின்றோம்



பதினேழாம் ஆண்டு அகவை பூர்த்தியாகி பதினெட்டாம் அகவையில் காலடி பதிக்கும் யாழ்.மின்சார நிலைய வீதி.

இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்

(உரிமையாளர்- என்.நித்தியானந்தன்)
021 222 6953, 077 722 5310

அவர்களை சிறப்புற உளமார வாழ்த்துகின்றோம்.
இன்றுபோல் என்றும் எல்லோரும் போற்றிட
நல்லோர் வாழ்த்திட நல்லதே செய்து நன்றே
நிகழ்ந்திட நல்வாழ்த்துக்கள்! (11680)

வாழ்த்துபவர்: திரு.
வேணுகா ரவல்ஸ், நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 61

# எப்போதும் மனித நேயத்தை விதைப்போம்



ஒரு வயதான தம்பதியினர் தங்கள் ரயில் வரும் வரை ரயில் நிலையத்தில் அமர்ந்திருக்கிறார்கள்.

அவர்களுக்கு எதிரே நன்றாக உடையணிந்த கறுப்பின இளைஞன் ஒருவனும் இருக்கிறான்.

வயதான பெண் தற்செயலாக அந்த இளைஞனைப் பார்க்கிறாள், அவள் இந்த இளைஞனிடம் ஏதோ குறையை பார்க்கி றாள். உற்றுப் பார்த்தபோது அந்த இளைஞன் நன்றாக உடை அணிந்திருந்தாலும், அவன் தனது ரையை (கழுத்துப்பட்டி) தவறாகக் கட்டியிருப்பதை அவள் அடையாளம் காண்கிறாள்.

அவள் தன் கணவரின் முழுங்கையைத் தட்டி யாரும் உணராத படி அதை காட்டுகிறாள்.

கணவன் எழுந்து சென்று அந்த இளைஞனிடம் பேசுவது போல பாசாங்கு காட்டி அவனுடைய அனுமதியுடன் அவன் ரையில் இருந்த தவறை யாரும் பார்க்காதபடி சரி செய்கிறார் ....

சம்பவத்தை யாரும் கண்டுகொள்ளக் கூடாது என்பதற்காகவும், அங்கிருந்தவர்கள் அதை காண்பதால் அவனுக்கு ஏற்படும் அசௌகரியத்தை தவிர்க்கவும் அந்த பெண் அதை மறைத்த படி நிற்கும் காட்சியை எப்படியோ மற்றொரு நபர் புகைப்படம் எடுத்துள்ளார்.

அந்த இளைஞர், தன் வேலைக்கான நேர்காணலுக்கு செல்வதற்காக காத்திருந்தமை பின்னர் தெரிய வந்திருக்கிறது.

அன்றாடம் இவ்வாறு தவறு விடுபவர்கள் பலரை கடந்திருப்போம். அப்போதெல்லாம் அதை கண்டும் காணாதது போல் நகர்ந்து விடுகின்றோம். அல்லது அந்தக் குற்றத்தை, தவறை சுட்டிக்காட்டி நகைச்சுவை எனும் பெயரில் ஒரு உள்ளத்தை சிதைத்து விடுகின்றோம்.

அதுகூட இல்லை என்றால் எம்முடைய அதிகப் பிரசங்கித்தனத்தை வெளிப்படுத்துவதற்காக அந்தத் தவறை திருத்தும் சாட்டில் பகிரங்கமாக ஒரு நபரை அவமானப்படுத்துகின்றோம். அறியாமையால் தவறிவிடும் ஒருவனை அழகிய முறையில் திருத்தும் மனிதநேயம் எத்தனை அற்புதமானது?

எப்போதும் மனிதநேயத்தை விதைப்போம் ....

அவசர உலகில் தொலைந்துபோன மான்மியங்களில் அதுவும் ஒன்று.

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

## சிவெரோடோனெட்ஸ்க் நகரின் மையப்பகுதியை நெருங்கிய ரஷ்ய படைகள்

(கீவ்)

ரஷ்யப் படைகள் உக்ரைனின் சிவெரோடோனெட்ஸ்க் நகரின் மையப் பகுதியை நெருங்கி விட்டதாக பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் இடம்பெற்ற தீவிர மோதலை அடுத்து அவர்கள் முன்னேறியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நகரத்தின் பாதிக்கு மேல் இப்போது செச்சென் போராளிகள் உட்பட ரஷ்யப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை உக்ரைனுக்கு பொருளாதார, மனிதாபிமான மற்றும் தற்காப்பு இராணுவ உதவிகளை பிரித்தானிய அரசாங்கம் தொடர்ந்தும் வழங்குவதாகவும் அறிவித்துள்ளது.

மேலும் ரஷ்யா மற்றும் பெலாரஸ் மீது பிரித்தானியா மேலதிக தடைகளை விதித்து வருகிறது என்றும் பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

## ரஷ்யாவிட
## தடை வி

(பிரஸ்ஸல்ஸ்)
ஐரோப்பிய
இருபத்தேழு ந
கொள்வனவு
தடைசெய்யப்பட

கடந்த சில நாட்களாக ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் கொள்வனவை தடை செய்வது குறித்த கலந்துரையாடல்களும், வாதங்களும் நடைபெற்று வந்த நிலையில் நேற்று முன்தினத்தில் ஐரோப்பிய ஒன்றியம் தனது இறுதி நிலைப்பாட்டை அறிவித்துள்ளது.

# பிரபல பின்னணி பாடகர் கேகே மாரடைப்பினால் மரணம்



(கொல்கத்தா)

இந்தியத் திரையுலகின் பிரபல பின்னணிப் பாடகர்களில் ஒருவரான கேகே என்று அழைக்கப்படுபவர் பாடகர் கிருஷ்ணகுமார் குன்னர் மாரடைப்புக் காரணமாக உயிரிழந்துள்ளார்.

கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற இசை நிகழ்ச்சியில் பங்கேற்ற கேகே திடீரென மயங்கி விழுந்த நிலையில் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்ட போது உயிரிழந்துள்ளார்.

இவர் குன்னத் ஹிந்தி, தெலுங்கு, கன்னடம் மற்றும் பெங்காலி உள்ளிட்ட பல மொழிகளில் பாடல்களை பாடியுள்ளார்.

கேரளாவைச் சேர்ந்த 53 வயதான கேகே, தமிழ் சினிமாவில் 50 இற்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார்.

இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் இசையில் 1997 ஆம் ஆண்டு வெளியான மின்சாரக்கனவு படத்தில் இடம்பெற்ற ஸ்ட்ராபெர்ரி கண்ணே பாடல் மூலம் தமிழில் கேகே அறிமுகமானார்.


காதல் வளர்த்தேன் (மன்மதன்), அப்படி போடு (கில்லி), காதலிக்கும் ஆசை (செல்லமே) நினைத்து நினைத்து (7ஜி ரெயின்போ காலனி), உயிரின் உயிரே (காக்க காக்க) உள்ளிட்ட அவர் பாடிய பாடல்கள் தமிழக ரசிகர்கள் இடையே பிரபலமானவை.

பாடகர் கேகேவின் திடீர் மரணம் அவரது ரசிகர்கள் மத்தியில் அதிர்ச்சியையும் மிகுந்த சோகத்தையும் ஏற்படுத்தி உள்ளது. அவரது மறைவுக்கு பல்வேறு தரப்பினர் இரங்கல் தெரிவித்துள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ம் இருந்து எண்ணெய் கொள்வனவு; ...தித்தது ஐரோப்பிய ஒன்றியம்

...ஒன்றியத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள ...டுகளின் அனுமதியுடன், ரஷ்யாவிடமிருந்து ...செய்யப்படும் கச்சாய் எண்ணெய் முற்றும் ...வதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.



மேலும் கடல் வழி கொள்வனவு மாத்திரமே இந்தத் தடைக்கு உட்படுத்தப்படுகின்றதாகவும், குழாய் வழி விநியோகம் தொடர்ந்தும் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே தொண்ணூறு வீதமான எண்ணெய் ஐரோப்பாவிற்கு வருவதற்கு உடன் அமுலாகும் வகையில் தடை விதிக்கப்படுவதாக ஒன்றியத்தின் தலைவர் ஊர்சுலா வென்டேல் லீயோன் தெரிவித்துள்ளார்.

ஹங்கேரியின் எதிர்ப்பு காரணமாகவே குழாய் வழி விநியோகம் தடை செய்யப்படவில்லை எனவும் தெரிவித்த ஊர்சுலா, இத்தடை மூலம் ரஷ்யாவிற்கு ஐரோப்பிய ஒன்றியம் ஒரு வருடத்திற்கு செலுத்தும் சுமார் நானூற்று முப்பது பில்லியன் அமெரிக்க டொலர்கள் தடை செய்யப்படும் எனவும், இதன் மூலம் பொருளாதார சிக்கல்கள் ரஷ்யாவில் உருவாகி, உக்ரைனுடனான போரை விரைவில் முடிவிற்கு கொண்டு வரும் எனவும் அவர் மேலும் தெரிவித்திருந்தார். (நி-6)

## உக்ரைனில் 9,029 பொதுமக்கள் பாதிக்கப்பட்டதை உறுதிப்படுத்தியது ஐ.நா.

(ஜெனிவா)

கடந்த பெப்ரவரி 24 முதல் மே 30 ஆம் திகதி நள்ளிரவு வரை உக்ரைனில் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை 9,029 என ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அமைப்பு உறுதி செய்துள்ளது.



அதன்படி இதுவரை 4,113 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் 4,916 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் அந்த அமைப்பு உறுதிப்படுத்தியது.

இருப்பினும் மரியுபோல், இசியம் மற்றும் போபாஸ்னா போன்ற பகுதிகளில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை கணக்கிடவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

அந்த புள்ளிவிபரங்களையும் இணைத்தால் உண்மையான உயிரிழப்பு எண்ணிக்கை கணிசமாக அதிகமாக இருக்கும் என்றும் ஐ.நா. குறிப்பிட்டுள்ளது.

கனரக பீரங்கிகள், ஏவுகணை மற்றும் வான்வழித் தாக்குதல்கள் காரணமாகவே இவர்கள் உயிரிழந்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது. (நி)

## நேபாள விமான விபத்தில் பலியான 22 பேரின் உடல்களும் மீட்பு



(காத்மண்டு)

நேபாள விமான விபத்தில் சிக்கி பலியான 22 பேரின் உடல்களும் மீட்கப்பட்டு விட்டதாக நேபாள விமான போக்குவரத்து ஆணையத்தின் செய்தித் தொடர்பாளர் தேவ்சந்திர லால் க்ஙணா தெரிவித்துள்ளார்.

நேபாளத்தின் பொக்காரா நகரில் இருந்து சுற்றுலாத் தலமான ஜோம்சோமுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை புறப்பட்டுச் சென்ற விமானம், முஸ்டாங் மலைப் பகுதியில் மோதி நொறுங்கி விழுந்து விபத்துக்குள்ளானது.

இந்த விமானத்தில் இந்திய தம்பதியர், அவர்களின் பிள்ளைகள் இருவர், ஜேர்மனியைச் சேர்ந்த இருவர், நேபாளத்தைச் சேர்ந்த 13 பயணிகள், விமானி உள்ளிட்ட 3 ஊழியர்கள் என 22 பேர் இருந்தனர்.

மோசமான காலநிலை காரணமாகவே விமானம் மலையில் மோதி விபத்து இடம்பெற்றுள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. (நி)

## 2 மாதங்களின் பின் கொவிட் கட்டுப்பாடுகள் சீனாவில் தளர்வு

(பீஜிங்)

சீனாவின் வர்த்தக தலைநகரான ஷங்காயில் ஊரடங்கு உத்தரவு இரண்டு மாதங்களுக்குப் பிறகு தள்ர்த்தப்பட்டுள்ளது.

அதன்படி, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை 2 கோடியே 50 இலட்சம் மக்கள் வசிக்கும் நகரத்தில் பெரும்பாலான மக்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கு கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன.

ஷங்காயில் கொவிட் ஊரடங்கு தேசிய பொருளாதாரத்தை பின்னுக்குத் தள்ளியதோடு, பெரும்பாலான மக்களை வீட்டுக்குள் முடக்கியது.

அதேநேரத்தில் அதன் இரக்கமற்ற மற்றும் அடிக்கடி குழப்பமான கட்டுப்பாடுகள் நேரடியாகவும் இணையத்திலும் எதிர்ப்புகளைத் தூண்டியது.

இந்நிலையில், ஷங்காய் நகரில் அரை இலட்சம் மக்கள் கொவிட் கட்டுப்பாடுகளின் கீழ் உள்ளனர். ஏனெனில் வைரஸ் தொற்றாளர்கள் இன்னும் கண்டறியப்படுகின்றனர்.

அனைத்து கட்டுப்பாடுகளும் படிப்படியாக நீக்கப்படும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது. சீனாவின் ஒட்டுமொத்தக் கொள்கையான "ஜீரோ கொவிட் திட்டம்" நடைமுறையில் உள்ளது.

பொதுப்போக்குவரத்து மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடைகள் திறக்கப்பட்டுள்ளன, பெரிய கடைகளில் 75 சதவீதமானவர்களுக்கு உட்செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

உணவகங்கள் மீண்டும் சேவையை ஆரம்பிக்கலாம். ஆனால் உணவருந்த அனுமதி இல்லை.

திரையரங்குகள், அருங்காட்சியகங்கள் மற்றும் உடற்பயிற்சிக் கூடங்கள் மூடப்பட்டுள்ளன.

மேலும் பெரும்பாலான குழந்தைகள் பாடசாலைக்கு செல்ல அனுமதிக்கப்படவில்லை. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிசையில் நின்று ஏமாற்றம்

# ஆத்திரமடைந்த மக்கள் வீதி மறித்து போராட்டம்



(தருமபுரம்)

கிளிநொச்சியில் சமையல் எரிவாயு சிலிண்டர்களைப் பெற்றுக்கொள்வதற்கு அதிகாலை முதல் காத்திருந்த மக்கள் ஏ-9 வீதியை மறித்து போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையைத் தொடர்ந்து எரிபொருள் மற்றும் சமையல எரிவாயு சிலிண்டர் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு மக்கள் தினமும் நீண்ட வரிசைகளில் காத்திருந்து வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று கிளிநொச்சிக்கு சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வந்துள்ள நிலையில் அவற்றை பெற்றுக் கொள்வதற்காக அதிகாலை முதல் வரிசையில் காத்திருந்த போதும் சமையல் எரிவாயு சிலிண்டர் வழங்கப்படாததையடுத்து நீண்ட வரிசையில் காத்திருந்த மக்கள் எரிவாயு சிலிண்டர்களை ஏ-9 வீதியின் குறுக்காக வைத்து வீதியை மறித்து போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு கிளிநொச்சி பொலிஸார் விரைந்து சென்று நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

எரிவாயு சிலிண்டர் விநியோகஸ்தருடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தையின் அடிப்படையில் டோக்கன் வழங்கப்பட்டு எரிவாயு சிலிண்டர் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதனையடுத்து குறித்த போராட்டம் கைவிடப்பட்டது (4-315-316)

# புதிய நிர்வாகத்தெரிவு



(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவு ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் அண்மையில் நடைபெற்றது.

அதன்படி புதிய நிர்வாக சபையின் தலைவராக மு.விக்னேஸ்வரன், உப தலைவராக ந.ஜெகதீஸ்வரன், செயலாளராக அ.அருந்தவநேசன், உப செயலாளராக இ.குணநாதன், பொருளாளராக இ.இராசசேகரமும், நிர்வாக சபை உறுப்பினராக வே.பாலசுப்பிரமணியம் மற்றும் வ.சிவலீலாதேவி ஆகியோர்தெரிவுசெய்யப்பட்டனர்.

அத்துடன் ஓய்வூதியர்கள் கௌரவிப்பு நிகழ்வும் இதன்போது இடம்பெற்றது. (4)

# மன்னார், கொழும்பைச் சேர்ந்த மூவர் தமிழகத்தில் தஞ்சம்

(மன்னார்)

கொழும்பைச் சேர்ந்த தாய், மகன் மற்றும் மன்னாரை சேர்ந்த ஒருவர் உள்ளிட்ட மூவர் படகு மூலம் தமிழகம் சென்று தஞ்சம் கோரியுள்ளனர்.

குறித்த மூவரும் மன்னார் பேசாலை கடற்கரையில் இருந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு படகொன்றில் சென்று நேற்று புதன்கிழமை அதிகாலை தனுஷ்கோடிக்கு அருகில் உள்ள கோதண்டராமர் கடற்கரை பகுதியைச் சென்றடைந்துள்ளனர்.

இது குறித்து தகவல் அறிந்த மண்டபம் கடலோர காவல் படையினர் மூவரையும் மீட்டு விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை காரணம்காட்டி கடந்த மார்ச்மாதம் 22 ஆம் திகதி முதல் நேற்று வரை 83 பேர் கடல் மார்க்கமாக தமிழகம் சென்றுள்ளனர். (4-285)

# போதைப் பாவனையால் ஏற்பட்ட ஒவ்வாமையே மரணத்திற்குக் காரணம்

(மன்னார்)

மன்னாரில் கடந்த திங்கட்கிழமை இரவு காரினுள் மர்மமான முறையில் உயிரிழந்த இரண்டு இளம் குடும்பஸ்தர்களும் மதுபானம் மற்றும் போதைப்பொருள் பயன்படுத்திய நிலையில் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாகவே உயிரிழந்துள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 30 ஆம் திகதி இரவு மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கி காரில் பயணித்த இரண்டு இளம் குடும்பஸ்தர்களின் பிரேத பரிசோதனை யாழ். போதனா மருத்துவமனையில் இடம்பெற்றது.

இதன்போதே மதுபானம் மற்றும் போதைப்பொருள் பயன் படுத்தியமையினால் ஏற்பட்ட ஒவ்வாமையே உயிரிழந்தமைக்கான காரணம் எனத் தெரிய வந்துள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-285)

# மந்துவில், மல்லிகைத்தீவில் குடிநீருக்கு நெருக்கடி

(கண்டாவளை)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட மந்துவில் மற்றும் மல்லிகைத் தீவு ஆகிய கிராமங்களில் குடிநீர் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக இந்த பிரதேசத்தில் காணப்படுகின்ற கிணறுகளில் அதிகமான கிணறுகள் ஆழங்கூடிய கிணறுகளாகவும் கூடுதலான கிணறுகள் நீர் வற்றியும் காணப்படுகின்றன.

இந்த நிலையில் சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேபோன்று கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கேப்பாபிலவு பிலக்குடியிருப்பு ஆகிய பகுதிகளிலும் குடிநீர் பற்றாக்குறை காணப்படுவதாகவும் குறிப்பாக இந்த பிரதேசத்திலே அமைக்கப்பட்டிருக்கும் குழாய்க்கிணறுகள் பழுதடைந்த நிலையில் காணப்படுவதாகவும் அவற்றைப் புனரமைத்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (4-315)

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வாலிப கிறிஸ்தவர் சங்கத்தின் ஏற்பாட்டில் வருடாந்த இரத்ததான முகாம் நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை 109, யாழ்ப்பாணம் கண்டி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள மேற்படி சங்கத்தின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி இரத்ததான முகாம் நிகழ்வில் குருதிக் கொடையாளர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு இரத்த தான முகாம் நிகழ்வுகளின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (4-18)

# பயன்பாடின்றி காணப்படும் வன்னேரிக்குளம் சுற்றுலா மையம்



(கண்டாவளை)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் பகுதியில் கடந்த 2015 ஆம் ஆண்டு வடமாகாண சபையினால் ஆறு மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட சுற்றுலா மையம் எந்தப் பயன்பாடுமின்றி சமூக விரோத செயற்பாடுகளே இடம்பெறுகின்றன என பிரதேச மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

குறித்த சுற்றுலா மையம் கைவிடப்பட்ட நாளில் இருந்து இன்று வரைக்கும் எந்தவிதமான பயன்பாடுகளும் இன்றி காணப்படுவதுடன் அதன் கட்டடங்களும் தற்போது சேதமடைந்துள்ளன.

அத்துடன் சட்டவிரோத செயற்பாடுகளின் கூடாரமாகவும் மாறியுள்ளது. இதனைப் பேணி பாதுகாத்து பராமரிக்க வேண்டிய பிரதேச சபை இது தொடர்பில் இதுவரை எந்த நடவடிக்கைகளையும் எடுப்பதில்லையென்றும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே இது தொடர்பில் உரியவர்கள் கவனம் எடுக்கும்படி பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (4-315)

## விசர் நாய் தடுப்பு மருந்து தட்டுப்பாடு

# கட்டாக்காலிகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுங்கள்

## அங்கஜன் பணிப்புரை



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள மருத்துவமனையில் விலங்கு விசர் நாய் தடுப்பு மருந்து உள்ளிட்ட மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் உடனடியாக உள்ளூராட்சி மன்றங்கள் கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் துறைசார் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டில் விலங்கு விசர் நாய் தடுப்பூசி உள்ளிட்ட மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படு கிறது. எனவே உள்ளூராட்சி [illegible] கட்டாக்காலி நாய்களை [illegible]டுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு கட்டுப்படுத்தாவிட்டால் அதன் காரணமாக ஏற்படும் மரணங்கள் அதிகரித்து விடும். இது தொடர்பாக அரசாங்க அதிபர் ஆளுநருடன் கலந்துரையாடி உள்ளூராட்சி சபைகள் ஊடாக கட்டாக்காலிகளை அகற்ற நடவடிக்கை எடு[illegible] தார். [illegible]

# கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா

(குப்பிழான்)

ஏழாலை துர்க்காதேவி ஆலய (தேவி கோவில்) மஹா கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 7.20 மணி முதல் 8.50 மணிவரை இடம்பெறவுள்ளது.

மஹா கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்க கிரியைகள் நேற்று புதன்கிழமை காலை6 மணிக்கு ஆரம்பமாகியது.

எண்ணெய்க் காப்புச் சாத்தும் வைபவம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறும் என மேற்படி ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (4-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாமதிக்காது பயிர்ச்செய்கையில் ஈடுபடுங்கள்

# விவசாயிகளிடம் அரசாங்கம் கோரிக்கை

(கொழும்பு)

**உரம் கிடைக்கும் வரை பார்த்துக் கொண்டிருக்காமல், உரம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் பயிர்ச்செய்கையில் ஈடுபடுமாறு விவசாயிகளிடம் கேட்டுக் கொள்வதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.**

இரசாயன மற்றும் சேதன உரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக 7 பிரதான நாடுகளிடம் எழுத்து மூலம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்தியாவுடன் இதன் போது நேரடி பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இவ்வாறு இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் உணவு உற்பத்தி மற்றும் விவசாயத்தை ஊக்குவிப்பது தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட்டது.

இந்தியாவிடமிருந்து 65 000 மெட்ரிக்தொன் இரசாயன உரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகருடனும், இந்தியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொடவுடனும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதைவிட 7 நாடுகளுடன் உரம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அத்தோடு விதை நெற் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவோருக்கு நிவாரண அடிப்படையில் உரத்தினை வழங்குவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அரிசித் தட்டுப்பாட்டை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அடுத்த வருடத்திலேனும் அரிசி இறக்குமதியை முற்றாக தவிர்ப்பதை இலக்காகக் கொண்டு நெற்பயிர்ச்செய்கையை விவசாயிகள் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும்.

எனவே உரம் கிடைக்கப் பெறும் வரை பார்த்துக் கொண்டிருக்காமல், உரம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் பயிர்ச் செய்கையில் ஈடுபடுமாறு விவசாயிகளிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

பயிர்ச்செய்கையின் போது விவசாயிகள் நட்டத்தினை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும் என அவர் தெரிவித்தார். (நி)

# மின்பட்டியல் அடிப்படையில் எரிவாயு விநியோகம்

## லிட்ரோ அறிவிப்பு




(கொழும்பு)

மின்பட்டியலின் அடிப்படையில் குடும்பமொன்றுக்கு மாதாந்தம் ஒரு எரிவாயு சிலிண்டர் வீதம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

தற்போதைய எரிவாயு பற்றாக்குறையான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பலரும் ஒரே நேரத்தில் பல சிலிண்டர்களை கொள்வனவு செய்து அவற்றை கூடிய விலைக்கு விற்று வருவதாக லிட்ரோ நிறுவனத்துக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனைத் தடுக்கும் வகையிலும் அனைவருக்கும் எரிவாயு சிலிண்டர் கிடைப்பதை உறுதி செய்யும் வகையிலும் மின்பட்டியல் அடிப்படையில் எரிவாயு சிலிண்டர் விநியோகம் நடைபெறவுள்ளது.

தற்போதைய நிலையில் எரிவாயு சிலிண்டர் விநியோகத்தில் நடைபெறும் குளறுபடிகள் அத்தனையும் அதன்மூலம் முடிவுக்குக் கொண்டுவரமுடியும் என்றும் லிட்ரோ நிறுவனம் நம்பிக்கை தெரிவித்துள்ளது. (நி)

# 21 ஐ குழப்பும் பசிலின் ஆதரவாளர்கள்

(கொழும்பு)

அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தத்தை சீர்குலைக்கும் ஒரு புதிய நடவடிக்கையாக பாராளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள், கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதியிடம் தமது வலுவான கருத்துக்களை வெளியிட்டனர்.

அரசியலமைப்பு மாற்றங்களுக்கு முன்னுரிமை வழங்குவதைக் காட்டிலும், பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர். எனினும் 21 ஆவது திருத்தம் அரசியலமைப்பில் இணைக்கப்பட வேண்டும் என்று கோட்டாபய ராஜபக்ஷ இதன் போது வலியுறுத்தி னார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அதற்கு சாதகமாக கருத்துரைத்தார். பாராளுமன்ற உறுப்பினர்களில் சிந்தக மாயதுன்ன, சரத் வீரசேகர மற்றும் நாலக கொட ஹேவா உட்பட்ட பசிலின் ஆதரவாளர்களே, 21 க்கு எதிராக கருத்துரைத்தவர்களாவர். எனினும் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லன்சா, சுற்றுலா அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மற்றும் பலர் இது மக்களின் உணர்வுகளை கருத்திற் கொண்டு 21வது திருத்தம் சட்டமாக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டனர். 21 ஆவது திருத்தத்தில் இரட்டைக் குடியுரிமை கொண்டவர்களுக்கு பாராளுமன்றம் செல்ல முடியாது என்ற சரத்தே பசிலின் எதிர்ப்புக்கு காரணமாக அமைந்துள்ளது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 240 | 250 | 350 |
| உருளைக்கிழங்கு | 240 | 230 | 240 | 240 |
| பச்சைமிளகாய் | 450 | 400 | 450 | 500 |
| தக்காளி | 800 | 700 | 600 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 200 | 140 | 140 |
| கோவா | 340 | 280 | 280 | 350 |
| கரட் | 200 | 360 | 400 | 400 |
| பூசணி | 140 | 120 | 120 | 140 |
| புடோல் | 250 | 200 | 200 | 220 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 350 | 450 | 450 | 500 |
| பெரிய வெங்காயம் | 250 | 240 | 230 | 240 |
| பாகற்காய் | 650 | 700 | 700 | 600 |
| வெண்டக்காய் | 140 | 160 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 150 | 200 |
| பயற்றங்காய் | 200 | 270 | 200 | 160 |
| லீக்ஸ் | 250 | 240 | 280 | 320 |
| பீற்றூட் | 350 | 400 | 350 | 400 |
| கறிமிளகாய் | 600 | 450 | 500 | 500 |
| முருங்கைக்காய் | 1500 | 1800 | 1200 | 1400 |
| போஞ்சி | 800 | 700 | 700 | 700 |
| கத்தரிதம்புள்ள | 280 | 150 | 300 | 300 |
| கீரை – 1 பிடி | 60 | 40 | 70 | 140 |
| தேசிக்காய் | 550 | 350 | 400 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 400 | 180 | 200 |
| வெங்காயப்பூ | — | 600 | 300 | — |
| முள்ளங்கி | 200 | 140 | 160 | 240 |
| பொன்னாங்கண்ணி | 60 | 70 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 40 |
| ஈரப்பலா | 80 | — | 100 | 140 |

# பாரியளவில் நாட்டைவிட்டு வெளியேறும் இலங்கையர்கள்



(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தின் புறப்பாடு முனையம் சில நாட்களாக பரபரப்பாக காணப்படுவதாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாரிய அளவிலான இலங்கையர்கள் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றமையே அதற்குக் காரணமாகும்.

வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புக்காகச் செல்பவர்களுக்கு அரசாங்கம் அதிக வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அதற்கமைய, அதிகளவானோர் வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்வதுடன், மாணவர்கள் கல்வி கற்க வெளிநாடுகளை நோக்கி செல்லும் நடவடிக்கைகளும் இந்த நாட்களில் அதிகரித்துள்ளன.

மேலும், வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளை தங்கள் நாடுகளில் திரும்ப அழைப்பதன் காரணமாகவும் விமான நிலையம் பரபரப்பாக இயங்குவதாகவும் மக்கள் பாரிய அளவில் குவிந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எப்படியிருப்பினும் கட்டுநாயக்க விமான நிலையத்தின் உள்வரும் நுழைவு முனையம் அவ்வளவு பரபரப்பாக இல்லை என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய பொருளாதார நெருக்கடிகள் மற்றும் அரசியல் நெருக்கடிகள் காரணமாக வெளிநாட்டில் இருந்து வருகை தரும் பயணிகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளதுடன் இலங்கையில் இருந்து வெளி நாட்டுக்குச் செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



## மருமகள் எப்படி?

மணலூரில் மாதவ சாஸ்திரி என்ற பணக்காரப் பண்டிதர் இருந்தார். அவருடைய மகன் கிருஷ்ண சாஸ்திரியும் வேத சாஸ்திரங்களை நன்கு கற்றவன். அவனுக்கு புத்திசாலியான பெண்ணாகப் பார்த்து மணம் செய்து வைக்க மாதவ சாஸ்திரி விரும்பினார்.

அவனுக்குத் தம் பெண்ணைக் கொடுப்பதாகப் பலர் வந்தனர். ஆனால் மாதவ சாஸ்திரிக்கு எந்தப் பெண்ணும் பிடிக்கவில்லை. கீழூருள்ள குப்பு சாஸ்திரியின் பெண் மிகவும் புத்திசாலி எனக் கேள்விப்பட்டு மாதவ சாஸ்திரி தாம் பெண்ணைப் பார்க்க வருவதாக குப்பு சாஸ்திரிக்குத் தகவல் கொடுத்து நாளையும் குறிப்பிட்டிருந்தார். குறித்த நாளில் மாதவ சாஸ்திரியும் அவர் மனைவியும் கிருஷ்ண சாஸ்திரியும் தம் குதிரை வண்டியில் கீழூருக்குப் போய் குப்பு சாஸ்திரியின் வீட்டு வாசலில் இறங்கினார்கள். குப்பு சாஸ்திரியும் அவர்களை மரியாதையுடன் வரவேற்று வீட்டினுள் அழைத்துச் சென்றார்.

சற்று நேரத்திற்குப் பின் குப்பு சாஸ்திரியின் மனைவி காமாட்சி தன் மகள் மீனாவை நன்கு அலங்கரித்து அவர்கள் முன் அழைத்து வந்தாள். மீனா மாதவ சாஸ்திரியையும் அவர் மனைவியையும் கிருஷ்ண சாஸ்திரியையும் நமஸ்கரித்து எழுந்தாள். மூவருக்கும் பெண் அழகானவள் என்று தெரிந்து போயிற்று. இனி அவளது புத்திசாலித்தனத்தைத் தான் பரீட்சித்துப் பார்க்க வேண்டும்.

குப்பு சாஸ்திரி அப்போது மாதவ சாஸ்திரியிடம் "எனக்கு மூன்று பெண்கள். ஒரு மகன். மூத்த பெண் மீனா. மற்ற இரு பெண்களும் மகனும் அவர்களது தாய் மாமா வீட்டிற்குப் போயிருக்கிறார்கள்" என்றார்.

மாதவ சாஸ்திரியும் "உங்கள் பெண் மீனா தங்க விக்கிரகம் போல அழகாக இருக்கிறாள். அவள் புத்திசாலியா என்று பரீட்சிக்கலாமா? என் மகனைக் கேள்விகள் கேட்கச் சொல்கிறேன். உங்கள் மகள் சரியாக பதில் சொல்லிவிட்டால் என் மருமகளாக ஏற்றுக் கொள்கிறேன்" என்றார்.

குப்பு சாஸ்திரியும் "ஆகா! தாராளமாகக் கேட்கலாம். என் மகள் நன்கு படித்தவள்" என்றார். மாதவ சாஸ்திரியும் தன் மகனைப் பார்த்து "நீ கேள்விகளைக் கேட்கலாம்". எனவே கிருஷ்ண சாஸ்திரியும் "உங்கள் வீட்டில் முகம் பார்க்கும் கண்ணாடிக்கு எதிரிகள் எவ்வளவு பேர்?" எனக் கேட்டான். மீனாவும் "யாரும் இல்லை. என் தங்கைகளும் தம்பியும் அதன் நண்பர்களே" என்றாள்.

அப்போது கிருண சாஸ்திரி "அப்படியானால் உன் விஷயம்?" எனக் கேட்கவே மீனாவும் "கை வளையல் அழகைக் கூட நீங்கள் கண்ணாடியில் தான் பார்ப்பீர்களா?" என்று எதிர்க் கேள்வி கேட்டாள்.

கிருஷ்ண சாஸ்திரியும் "முன்பு கண்ணாடிக்கு நண்பனாக இருந்து இப்போது விரோதியானவர்கள் உன் வீட்டில் எவ்வளவு பேர் எனக் கேட்டான். மீனாவும் "அப்படி மாறியவர் எங்கள் வீட்டில் ஒருவரே. அவர் என் பாட்டி. அவரும் அண்மையில் தான் காலமானார்" என்றாள்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

அனுமன் அறிமுகம்

## கிட்கிந்தா காண்டம்




சீதைக்கு வாழ்க்கை கசந்து விட்டது; துன்பத்துக்கும் ஓர் எல்லை உண்டு; உயிர் அவளுக்குச் சுமையாய் விளங்கியது; உயிருக்கும் உணர்வுக்கும் மதிப்புத் தராமல் தன் உடலை இராவணன் விரும்புவதை அவள் வெறுத்தாள்; அழகு தனக்கு எதிராகப் போரிடுவதை அறிந்தாள்; "மானம் இழந்த பின் வாழாமை இனியது" என்ற முடிவுக்கு வந்தாள்.

உயிர் விடுவதற்குத் துணிந்தாள்; அருகில் இருந்த குருக்கத்திச் செடி அவளுக்கு உதவியாய் நின்றது. அதனைச் சுருக்குக் கயிறாய் மாற்ற நினைத்தாள்; வாழ்க்கையின் கரை ஓரத்தைக் கண்டாள். மயிர் இழையில் அவள் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது; தடுத்து நிறுத்த வேண்டும் என்ன செய்வது? அவள் நோய்க்கு மருந்து யாது?

அனுமன் நடந்த இந் நிகழ்ச்சிகளை நாடகம் போல் கவனித்து வந்தான். சோகத்தின் எல்லையில் இருப்பவளை வேகமாகக் காத்தல் வேண்டும்; அதற்கு மருந்து? 'இராமன்' என்ற திருப் பெயர்தான்; 'இராமன் வாழ்க' என்று குரல் கொடுத்தான். அப் பெயர் அவளுக்கு உயிரைத் தந்தது; புத்தொளியைக் கண்டாள்; அவள் பார்வை, ஒலி வந்த திக்கை நோக்கிற்று. "வீரனே நீ யார்?" என்று கேட்டாள்.

"இராமன் அனுப்பிய தூதுவன் பெயர் அனுமன்" என்றான்.

காட்டுக் கூச்சல் கேட்டுப் பழகிய அவளுக்குத் தெய்வ கீதம் கேட்பது போல் இருந்தது; அவள் உள்ளம் உருகியது; இராமன் பெயரைக் கேட்டதும் அவளுக்கு வாழ்க்கை வாயில் தென்பட்டது; வேதங்கள் மறையவில்லை; அவற்றின் நாதங்களை அவளால் கேட்க முடிந்தது; நீதியும் அறமும் அழியவில்லை; நேர்மைகள் தழைக்கின்றன என்பதை உணர்ந்தாள்; "இராமன் தன்னைக் கைவிடவில்லை; உயிர்க் காவலனாய் இருக்கிறான்" என்பதை அறிந்தாள். அரக்கர் வாழும் இடத்துக்குக் குரங்கினம் வந்தமை அவளுக்கு வியப்பைத் தந்தது. "நீ எப்படி இங்கு வந்தாய்?" என்று கேட்டாள்.

அங்கதன் தலைமையில் தென்திசை நோக்கி அனுப்பப்பட்ட படை வீரர்களுள் தான் ஒருவன் என்பதையும் தான் இலங்கை மாநகரில் சீதையைக் கண்டதையும் விளம்பினான். இங்கு தான் இருப்பது அவனுக்கு எப்படித் தெரியும்? என்று கேட்டாள்.

"காட்டிடை நீவிர் இட்ட மற்றைய அணிகலன்கள்தான் உம் மங்கல அணியைக் காத்தன" என்று கூறினான். செய்தி கேட்டதும் 'உய்தி உண்டு' என்று நம்பினாள்; அவன் சொன்ன வற்றிற்கு ஆதாரம் காட்ட முடியுமா? என்று கேட்டாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவினால் தவிர்க்க முடியாத ஒரு செயல் தாமதத்தால் நல்ல பலனை அளிக்கும் விதத்தில் முடிகின்றது.
- செனேக்கா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# நீதியை நிலைநிறுத்திய உயர் நீதிமன்றத் தீர்ப்பு

நீதிமன்றத் தீர்ப்பு என்பது இறைவனால் வழங்கப்படும் தீர்ப்புக்கு ஒப்பானது.

விளக்கம், விசாரணை, சாட்சியங்களின் பதிவுகள், சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட சான்றாதாரங்கள், மருத்துவ அறிக்கைகள், தடயவியலாளர்களின் விதப்புரைகள், சட்டத்தரணிகளின் வாதங்கள் எனப் புரந்து பட்ட விசாரணைகளின் அடிப்படையில் நீதிமன்றத் தீர்ப்பு அமைகிறது.

தவிர, நீதிமன்றத்தின் தீர்ப்பை பரிசீலனைக்கு உட்படுத்துவதற்கென நீதியரசர்கள் அடங்கிய உயர் நீதிமன்ற ஏற்பாடுகள் என நீதியின் தீர்ப்பு அறுதியிடப்படுகிறது.

இவ்வாறு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை உரியவாறு நடைமுறைப்படுத்துவதுதான் சட்டம் மற்றும் ஒழுங்கைப் பாதுகாப்பதற்கான வழிமுறையாகும்.

எனினும் இலங்கையில் நீதிமன்றத்தின் தீர்ப்பை மன்னித்து விடுகின்ற அதிகாரம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு வழங்கப்படுகின்ற ஏற்பாடுகளும் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படமாட்டாதா? என்று யாரேனும் கேட்டால், அதிகாரத் துஷ்பிரயோகம் இடம்பெறலாம் என்ற பதிலோடு அதற்கு உதாரணமும் உண்டு.

ஆம், 2011ஆம் ஆண்டு பாரதலக்ஷ்மன் பிறேமச்சந்திர என்ற பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா என்ற பாராளுமன்ற உறுப்பினரால், சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

இது தொடர்பில் நீதிமன்றில் வழக்கு விசாரணை நடைபெற்று, துமிந்த சில்வா குற்றவாளியாக இனங்காணப்பட்டு அவருக்கு நீதிமன்றம் மரண தண்டனையைத் தீர்ப்பாக அறிவித்தது.

எனினும் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவி ஏற்றதும்; துமிந்த சில்வாவுக்கு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட மரண தண்டனையை மன்னித்து அவரை விடுதலை செய்தார்.

இதுபோல மிருசுவில் படுகொலையுடன் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கும் நீதிமன்றம் மரண தண்டனை வழங்கியிருக்க, அதனையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மன்னித்து அவர்களையும் விடுதலை செய்தார்.

மன்னிப்பு யாருக்கு வழங்கப்பட வேண்டும் என்ற வரன்முறைகள் இல்லாமல் கொலைக் குற்றவாளிகளுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கும்போது, நீதியின் தீர்ப்பு நிலை பெறாமல் போய்விடுமோ என்ற ஏக்கம் நீதியின் பால் நம்பிக்கை கொண்ட மக்களை வாட்டியது.

இந்த நிலையில்தான், துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய பொதுமன்னிப்பை இடைநிறுத்தி இடைக்காலத் தீர்ப்பை வழங்கிய உயர் நீதிமன்றம் துமிந்த சில்வாவை உடனடியாகக் கைது செய்யுமாறு உத்தரவிட்டது.

உயர் நீதிமன்றத்தின் இந்த அதிரடித் தீர்ப்பு நீதி நிலை பெறும் என்ற நம்பிக்கையைத் தந்துள்ளதுடன் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்தாலும் நீதிமன்றத் தீர்ப்பை அலட்சியம் செய்ய முடியாது என்ற தீர்ப்பும் இதனூடு வழங்கப்பட்டுள்ளது.

ஆக, இனி மிருசுவில் படுகொலையுடன் சம்பந்தப்பட்ட; ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட குற்றவாளிகள் தொடர்பிலும் உயர் நீதிமன்றை நாடுவது தமிழ்ச் சட்டவல்லுநர்களின் கடமையாகிறது.

# நாடு முழுவதும் இன்றும் 50 ஆயிரம் சமையல் எரிவாயு விநியோகிக்கப்படும்

## லிட்ரோ நிறுவனம் தெரிவிப்பு

50 ஆயிரம் சமையல் எரிவாயு கொள்கலன்கள் நாடளாவிய ரீதியில் இன்றும்விநியோகிக்கப்படவுள்ளதாக லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

குறித்த எரிவாயு கொள்கலன்களை விநியோகிக்கும் விநியோகஸ்த்தர்கள் தொடர்பான விபரங்களை லிட்ரோ நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தள பக்கத்தில் பார்வையிட முடியும் எனவும் அந்நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த வாரம் எரிவாயு கொள்கலன் விநியோகத்தை லிட்ரோ நிறுவனம் தற்காலிகமாக இடைநிறுத்தியிருந்தது.

எரிவாயு தாங்கிய கப்பல் நாட்டை வந்தடைவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக குறித்த பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இந் நிலையில், 3,950 மெட்ரிக் தொன் எரிவாயு அடங்கிய குறித்த கப்பல் இரு நாட்களுக்கு முன் நாட்டை வந்தடைந்த நிலையில் அதிலிருந்து எரிவாயுவை தரையிறக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதனடிப்படையில், இன்று முதல் சமையல் எரிவாயு கொள்கலன் விநியோகம் வழமைக்கு திரும்பும் என லிட்ரோ நிறுவனம் குறிப்பிட்டிருந்தது.

அவற்றில் 60 சதவீதமான விநியோகம் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 2,500 மெட்ரிக் தொன் எரிவாயு அடங்கிய மற்றுமொரு கப்பல் வார இறுதியில் நாட்டை வந்தடையும் என லிட்ரோ நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (ம)

# மழைநீர் ஒழுகும் வகுப்பறையில் பரீட்சை எழுதிய மாணவர்கள்

## விசாரணை செய்யுமாறு கல்வி அமைச்சு பரிந்துரை

(கொழும்பு)

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் குடையை பிடித்தவாறு மழைநீர் ஒழுகும் வகுப்பறைகளில் அமர்ந்து பரீட்சை எழுதும் புகைப்படங்கள் சமூகவலைத்தளங்களில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

நேற்று முன்தினம் மாணவர்கள் குடையை பிடித்தவாறும், அழுக்கு படிந்த விடைத்தாள்களுடன் கசிந்த வகுப்பறைகளில் பரீட்சைக்கு அமர்ந்திருந்ததை அடுத்து கல்வி அமைச்சு குறித்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் வெள்ள நீர் நிறைந்த வகுப்பறைகளில் அமர்ந்து பரீட்சை எழுதிய மாணவர்களிடம் விசாரணை நடத்துமாறு கல்வி அமைச்சு பணிப்புரை விடுத்துள்ள நிலையில், பரீட்சைகள் திணைக்களத்தினால் குறித்த விசாரணைகள் மேற்கொள்ளப்படுமென கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், வகுப்பறைத் தேர்வு, வகுப்பறைகளை மாற்றத் தவறியது, சம்பவம் குறித்து தேர்வுத் துறைக்கு புகார் தெரிவிக்காதது குறித்தும் விசாரணைகள் மேற்கொள்ளபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக 03.06.2022 வெள்ளிக்கிழமை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வவுனியா பிரதேசத்தில் இலங்கை வங்கி, சுகாதாரத் திணைக்களம், கச்சேரி, தேசிய சேமிப்பு வங்கி - வவுனியா, மக்கள் வங்கி, வவுனியா இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், நகரசபை - வவுனியா, வவுனியா மருத்துவமனை, நீர் வழங்கல் (கச்சேரி), பிரதேச செயலக அலுவலகம் - மன்னார் வீதி, வவுனியா , கச்சேரி, புகையிரத நிலைய வீதியடி, வவுனியா நகரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# மது போதையில் சாரத்தியம் ரூ. 77 ஆயிரத்து 500 அபராதம்

(கரணவாய்)

மதுபோதையில் வாகனம் செலுத்திய நபர் ஒருவருக்கு 77 ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் கிருஷந்தன் பொன்னுத்துரை.

நேற்று புதன்கிழமை காலை மந்திகைப் பகுதியில் வைத்து நெல்லியடி போக்குவரத்து பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட நெல்லியடிப் பகுதியைச் சேர்ந்த அவரை நேற்றைய தினமே பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.

இதன்போது மது போதையில் வாகனம் செலுத்தியமை, சாரதி அனுமதிப் பத்திரம் இன்மை, காப்புறுதிப் பத்திரம் இன்மை, வரிப் பத்திரம் இல்லை ஆகிய நான்கு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அவர் குற்றங்களை ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து அவருக்கு அதிகபட்சமாக 77 ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் விதித்த நீதவான் ஒரு மாத கடூழிய சிறை தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார். (ம-60)

# சத்திய தரிசனம்



## சத்தியம்

- சுவாமி கூறுகிறார் "நோய் உள்ளவர்களும் துன்பப்படுகின்றவர்களும் செய்யும் சேவை நேரடியாக என்னை வந்தடையும்" இதை கருத்திற் கொண்டு உங்களது வாழ்க்கையை பிறருக்காகச் செலவிடுங்கள். நமது சுவரி அகிலாண்ட நாயகன் அல்லவா. மற்றும் நான் கடந்த மாதம் ஓரிரவில் கண்ணை விழித்த நிலையில் எனக்குச் சுவாமி சொல்கிறார் "அடிச்சு சொல்லு காமம் இருந்தால் சுவாமி வரமாட்டார் என்று கூறு" இந்த வசனம் சுவாமி கூறியபடியே எழுதுகின்றேன்.
- மற்றும் சுவாமி தனது 1008 நாளாந்த நற்சிந்தனையில் குறிப்பிட்டுள்ளார். அதாவது "தெய்வீகமானது தரமற்ற பாத்திரங்களையோ அல்லது வீணான காட்சிப் பொருட்களையோ அலங்கரிக்க மாட்டாது எனவும் மற்றும் பரிசுத்தமற்ற உடல்களிலும் எனது தெய்வீகத்தை உட்செலுத்தமாட்டேன். என்று சுவாமி கூறுகிறார். இதை எனது அனுபவத்தின் பயனாக சொல்கிறேன்.
- எனக்கு ஏற்பட்ட தெய்வீகம் பற்றி தொடர்ந்து எழுதுகின்றேன். 2007 ஆம் ஆண்டு காலப் பகுதியில் எனது உடல் சிலநாட்கள் காற்றில் பறப்பது போன்ற உணர்வு காணப்பட்டது. அது ஒரு ஆனந்தமாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 76

8) மாகாண சபைகள் தேர்தல் தொகுதி மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்படாத மாகாணத்தில் வாழும் சிறுபான்மை சமுதாயங்களுக்கு அவர்களது பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்கான விசேட ஒழுங்குகளையும், முறையான வழிமுறைகளையும், ஏற்படுத்துமாறு குழு ஆலோசனை கூறியிருந்தது.

விசேடமாக இந்திய வம்சாவளி மலையக தமிழர்கள் வாழும் தென்மாகாணம் (மாத்தறை மற்றும் காலி மாவட்டங்கள்), வடமேல் மாகாணம் (புத்தளம் மாவட்டம்), மேல் மாகாணம் (கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்கள்), சப்ரகமுவ மாகாணம் (இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட் டங்கள்), மத்திய மாகாணம் (கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்கள்) மற்றும் வடமாகாணம் (வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள்), முஸ்லிம்கள் வாழும் தென் மாகாணம் (காலி மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்கள்), வடமேல் மாகாணம் (குருநாகல் மாவட்டம்), மத்திய மாகாணம் (மாத்தளை மாவட்டம்), மேல் மாகாணம் (கம்பஹா மாவட்டம்) மற்றும் சிங்களவர்கள் வாழும் வட மாகாணம் (முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்கள்) மற்றும் கிழக்கு மாகாணம் (மட்டக்களப்பு மாவட்டம்) என்பனவாகும்.

9) மாவட்டக் கூட்டங்களில் பிரேரணைகளை முன்மொழிந்த தனிப்பட்டவர்களும் நிறுவனங்களும் தத்தமது பகுதிகளின் புவிசார் தகவல்களையோ நிலத் தோற்றங்களையோ சரியான முறையில் அறிந்திருக்கவில்லை.

இதனால் அவர்களுடைய பிரேரணைகள் பிழையான தகவல்களைக்கொண்டிருந்தன. பொதுமக்களை தெளிவுபடுத்தும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது சிறந்தது என குழு சிபாரிசு செய்திருந்தது.

**பல் அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதிகளை உருவாக்கவில்லையே என்ற குற்றச்சாட்டுக்கு எல்லை நிர்ணயக் குழு பின்வருமாறு பதில் அளித்திருந்தது.**

பல் அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதி பற்றிய தெளிவான விளக்கம் (ஒரு வாக்குச் சீட்டா அல்லது இரு வாக்குச் சீட்டா போன்ற விளக்கங்கள்) இயற்றப்பட்ட சட்டத்தில் காணப்படவில்லை. உள்ளூராட்சி மன்ற பல் அங்கத்தவர்கள் வட்டார முறையென்றால் அது பல் அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதி எண்ணக்கருவை நிறைவு செய்யாது.

நீங்கள் சட்டத்தைப் படித்துப் பார்த்தால் இன்னும் சில தெளிவின்மைச் சட்டத்தில் காண்பீர்கள். எம்மால் மட்டக்களப்பு, பொத்துவில், பேருவளை, கொழும்பு, ஹரிஸ்பத்துவ போன்ற இடங்களில் இரட்டை அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதிகள் உருவாக்கியிருக்க முடியும்.

உருவாக்கப்படாமைக்கான காரணம் சட்டத்தில் இருந்த தெளிவின்மையேயாகும். ஆனால் மேற்கூறப்பட்ட சகல இடங்களிலும் இரு இனங்களும் வெல்லக்கூடியதாக தனி அங்கத்தவர்கள் தொகுதி உருவாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். அவ்வாறு உருவாக்கப்பட்டதே மேற்கூறப்பட்ட அக்குறைன தொகுதியாகும்.

மற்றைய இடங்களில் இரட்டை அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்படாமைக்கு காரணம் என்னவெனில், இரட்டை அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதி உருவாக்கப்படும் போது, கணித முறையில் பார்த்தால் ஒரு கட்சிக்கு அத்தொகுதியிலுள்ள சனத்தொகை /வாக்காளர் எண்ணிக்கையில் குறைந்தது 34 சதவீத வாக்குகளைக் கொண்டிருந்தால் மட்டுமே அக்கட்சியிலிருந்து ஒருவர் தெரிவு செய்யப்பட வாய்ப்புகள் உண்டு.

ஏனெனில் மிகுதி 66 சதவீதத்தில் அரைவாசி 33%. எனவே அவ்வினத்திலிருந்து இருவர் தெரிவு செய்யப்படமாட்டார்கள். இதேபோல் மூன்று அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதி உருவாக்கப்படும் போது, கணித முறையில் பார்த்தால் ஒரு கட்சிக்கு அத்தொகுதியிலுள்ள சனத்தொகை / வாக்காளர் எண்ணிக்கையில் குறைந்தது 26 சதவீத வாக்குகளைக் கொண்டிருந்தால் மட்டுமே அக் கட்சியிலிருந்து ஒருவர் தெரிவு செய்யப்பட வாய்ப்புகள் உண்டு.

எமது குழுவின் எல்லை நிர்ணயத்தில் இவ்வாறான விகிதத்தைக் கொண்ட தொகுதிகள் இல்லாத காரணத்தினால் மற்றைய இடங்களில் பல் அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதி உருவாக்கப்படவில்லை.

**சிறுபான்மைச் சமூகங்களுக்கு எல்லை நிர்ணயத்தில் எல்லை நிர்ணயக் குழுவினால் அநீதி செய்யப்பட்டுள்ளதாக பத்திரிகைகளில் செய்திகள் வந்திருந்தன. அதுபற்றி எல்லை நிர்ணயக்குழு தெரிவித்த கருத்துகள் கீழே தரப்படுகின்றன.**

எந்தவொரு தேர்தலுக்குமான தேர்தல் தொகுதிகளின் எல்லை நிர்ணயம் இரு படிகளில் செய்யப்படுகின்றன. முதலாவது படி எல்லை நிர்ணயம் எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்பதாகும்.

இதில் குழுவுக்குரிய அதிகாரம், ஆசனங்களின் எண்ணிக்கை, எல்லை வரம்புகள், பொறிமுறைகள் போன்றவற்றை குறிப்பிடலாம். இச்செயல் முறைக்கான அடிப்படை அளவுகோலானது அரசியலமைப்பினால் அல்லது சட்டங்களினால் கொடுக்கப்படுகின்றன.

இச் சட்டம் 2017 இல் வருடம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது.

இரண்டாவது படியில் முதலாவது படியில் கூறப்பட்ட எல்லை வரம்புகளுக்கு அமைய எல்லை நிர்ணயம் செய்வதாகும். இதில் இரண்டாவது படியயே எல்லை நிர்ணயக் குழுவினால் செய்யப்பட்டது.

2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாகாண சபைத்தேர்தல் (திருத்தச்) சட்டம் 2017 ஆம் ஆண்டுவரை இருந்த மாகாண சபைத் தேர்தல் முறையை மாற்றி கலப்புத் தேர்தல் முறையைக் கொண்டு வந்தது.

இத்திருத்தச் சட்டத்தில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட 3 அ (i) மற்றும் 3 அ (ii) ஆம் உட்பிரிவுகளில் குழுவுக்கான பணிப் பாணைகள் / சட்ட வரம்புகள் உள்ளடங்கியுள்ளன.

அவற்றில் ஒன்று மாவட்டத்திற்குள் தேர்தல் தொகுதிகளிடையே பொதுமக்களின் எண்ணிக்கையின் விகித சமமின்மையை குறைந்த மட்டத்தில் பேணுதல்.

இதன் கருத்து மாவட்டத்திற்குள் வாக்கின் சமபலத்தை பேணுதல் ஆகும். அதாவது வாக்கின் மூலம் ஒரு மாகாண சபைக்கான அங்கத்தவர்களைத் தெரிவு செய்யும் போது ஒருவரால் அளிக்கப்படும் வாக்கும் மற்றவரால் அளிக்கப்படும் வாக்கும் சம பலத்தைக் கொண்டதாக இருத்தலே ஜனநாயகமாகும்.

உதாரணமாக ஒரு தொகுதியில் சனத்தொகை 10,000 பேராகவும் மற்றைய தொகுதியில் சனத்தொகை 50,000 பேராகவும் இருப்பின் முதலாவது தொகுதி வாக்காளரின் பலம் இரண்டாவது தொகுதி வாக்காளரின் பலத்தைப் போல் 5 மடங்காகும்.

அதுமட்டுமல்ல மாகாண சபை அங்கத்தவருக்கு வழங்கப்படும் ஒதுக்கீட்டில் மக்களுக்கு கிடைக்கும் பலன் 5 மடங்கு வித்தியாசமாக இருக்கும்.

எனவே தொகுதிகள் எல்லை நிர்ணயம் செய்யும் போது தொகுதிகளில் உள்ள சனத்தொகை எண்ணிக்கை கிட்டத்தட்ட சமமாக இருக்கும் வண்ணம் எல்லை நிர்ணயம் செய்யப்படல் வேண்டும் என்பதே அடிப்படையாகும்.

இச் சட்டவரம்பு சிறுபான்மைச் சமூகங்களுக்கு சிறிய தேர்தல் தொகுதிகளை ஒதுக்குவதற்கு இடைஞ்சலாக இருந்தது.

2012 ஆம் ஆண்டிற்கான இறுதி மக்கள் தொகை மற்றும் வீடுகளின் கணக்கெடுப்பையும் கருத்திலெடுத்து, தேர்தல்கள் ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட்ட மாகாண சபையொன்றின் ஒவ்வொரு நிர்வாக மாவட்ட மட்டத்திலிருமிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையின்படி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய 50 சதவீதத்திற்குரிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை எல்லை நிர்ணயக்குழு தீர்மானித்தது. இவை அட்டவணை A இல் காட்டப்பட்டுள்ளது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## துமிந்த...

பெற்று வந்த நிலையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிகிச்சை பெற்று வரும் நிலையிலேயே அவர் தற்போது பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்ட பொது மன்னிப்பை இடைநிறுத்தி உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் இடைக்கால உத்தரவு பிறப்பித்ததுடன், அவரைக் கைது செய்யுமாறு குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு பணிப்புரை விடுத்தது.

இந்நிலையில் அண்மையில் வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பிய துமிந்த சில்வா, ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எனினும் உச்ச நீதிமன்றத்தின் உத்தரவை அடுத்து துமிந்த சில்வாவை உடனடியாக கைது செய்யுமாறு பொலிஸ்மா அதிபரை சட்டமா அதிபர் அறிவுறுத்தியிருந்தார்.

துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்ட பொது மன்னிப்பை சவாலுக்கு உட்படுத்தி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை பரிசீலித்த உயர் நீதிமன்றத்தினால் சில்வாவை கைது செய்வதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 01/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1251
வெற்றி இலக்கங்கள்
தனுசு 9 6 7 4 7 7
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2022.06.01
சீட்டிழுப்பு இலக்கம் 3015
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 52 53 54 63
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 01/06/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1121
வெற்றி எழுத்து E
சுப்பர் இலக்கம் 23
வெற்றி இலக்கங்கள் 36 40 42 50

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.06.01
சீட்டிழுப்பு இலக்கம் 082
வெற்றி இலக்கங்கள்
மகரம் 07 42 44 62 மகரம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/06/01
சீட்டிழுப்பு இலக்கம் 4773
ஆங்கில எழுத்து D
வெல்லப்பட்ட இலக்கங்கள் 2 2 4 9 5 3
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2022.06.01
சீட்டிழுப்பு இலக்கம் - 803
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 14 16 26 53

## முன்னாள்...

மான மகிந்த ராஜபக்ஷவை புதுடில்லியில் பொதுநிகழ்வொன்றில் உரையாற்றுவதற்காகவும், இந்து பௌத்த ஆலயங்களிற்கு விஜயம் மேற்கொள்வதற்காகவும் அழைக்கவுள்ளேன்.

அவர் மழைக்காலத்திற்கு முன்னர் ஜூன் மாதத்தில் இந்தியாவிற்கு வரமுடியும் என நான் எதிர்பார்க்கின்றேன் என சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார். (ம)

## பொலிஸில்...

நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்த வயோதிப மாது ஒருவர் வீடு திரும்பிய நிலையில் வீட்டில் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் வதிரி, கரவெட்டியைச் சேர்ந்த சபாநாயகம் இலட்சுமி பிள்ளை (வயது- 72) என்பவராவார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது மேற்படி வயோதிபமாது நேற்று புதன்கிழமை காலை நெல்லியடி பொலிஸ் நிலையத்துக்கு சென்று தனது அயல் வீட்டுக்காரர் தன்னை தாக்கியதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இவ்வாறு முறைப்பாடு செய்து விட்டு வீடு திரும்பிய அவர் பிற்பகல் 2 மணி அளவில் வீட்டில் மயங்கி சரிந்ததாக தெரிவிக்கப்பட்டது.

அவரை வைத்தியசாலைக்கு அழைத்துச்சென்றபோது அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக வைத்தியர்கள் கூறியுள்ளனர். பிரேத பரிசோதனையின் பிற்பாடே இவர் கொலை செய்யப்பட்டாரா அல்லது இயற்கை மரணமா என்பது தொடர்பில் தகவல் தெரியும் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-60)

## எதிர்வரும்...

விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

க.பொ.த சாதாரணதரப் பரீட்சை முடிவடைந்துள்ள நிலையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும், டீசல் பெறுவதற்கு பேருந்துகள் பல நாட்கள் வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளது. தனியார் பேருந்துகளுக்கு இலங்கை போக்குவரத்து சபை டிப்போ எரிபொருள் வழங்குவதாக கூறப்பட்டாலும், அதற்கான முறையான வேலைத் திட்டம் எதுவும் நடைமுறைப்படுத்தப் படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த வாரம் பயணிகள் பேருந்துகளுக்கு டீசல் வழங்க அரசு முன்னுரிமை அளிக்காவிட்டால், திங்கட்கிழமை முதல் பேருந்துகள் முழுமையாக நிறுத்தப்படும் என்றும் அவர் கூறினார். (ம)

## ஜோன்ஸ்டன்...

மே 9ஆம் திகதி கோட்டா கோ கம, மைனா கோ கம ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணையின் சில பகுதிகள் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த நிலையில், அது தொடர்பான பகுதிகளை ஆராய்ந்த பின்னரே முன்னாள் அமைச்சரைக் கைது செய்யுமாறு சட்டமா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

அலரிமாளிகை மற்றும் காலிமுகத் திடல் வன்முறை சம்பவங்கள் தொடர்பில் ஏற்கனவே சில அரசியல்வாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த நிலையில், முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவும் கைது செய்யப்பட்டு தற்போது ஆஜர்... ளது. (ம)

## உரம் வழங்க...

களை வழங்குவதற்கு இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இணக்கம் தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நீர்ப்பாசனத் துறை எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் தீர்வுகள் தொடர்பில் நேற்று பிற்பகல் கோட்டை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இந்த உரமானது இந்திய கடனுதவியுடன் வழங்கப்படுவதுடன், இலங்கைக்கு கிடைத்த 20 நாட்களுக்குள் இதனை விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ம)

## மின்சாரம் தாக்கி...

சேர்ந்த அன்ரன் ஜினேசன் ஜினேஜினி (வயது-4) என்ற சிறுமியே உயிரிழந்தவராவார்.

கடந்த திங்கட்கிழமை மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-316)

## 15-200 சதவீ...

சொக்லேட்களின் விலைகள் 200 சதவீதத்தினால் உயர்வடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் தயிர், பட்டர் மற்றும் பால் பொருள்கள் மீதான சிறப்பு பொருள்கள் ஆயிரம் ரூபாய் முதல் 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும் 369 பொருட்கள் மீதான இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்ட நிலையில் அவற்றை இறக்குமதி செய்வதற்கு நிதியமைச்சு அனுமதி அளித்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் 9ஆம் திகதி அத்தியாவசியமில்லாதவை எனத் தெரிவித்து இந்தப் பொருட்கள் இறக்குமதி செய்ய தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் புதிய வரி உள்ளிட்ட சட்டங்களுக்கு அமைய இவற்றை இறக்குமதி செய்ய நேற்று முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ம)

## யாழ். ...

துள்ளனர்.

இப் பேரணியானது சகோதர மொழி இளைஞர், யுவதிகளினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இப்பேரணியில் தமிழ் மக்களை போன்று, சிங்கள மக்களும் பெருமளவில் பங்கேற்றுள்ளனர்.

"அரசு ஆதரவா... கம் எரிக்கப்பட்டு 41 ஆண்டுகள்" என்று எழுதப்பட்ட பதாகையை தாங்கியவாறு இப் பேரணி முன்னெடுக்கப்பட்டது. (ம)

## அதிக விலைக்கு...

திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்

தற்பொழுது நாடு முழுவதிலும் பதுக்கி வைக்கப்பட்டுள்ள எரிபொருள் மற்றும் அதிக விலைக்கு அத்தியாவசியபொருட்களை விற்றல் அதிக விலைக்கு எரிபொருள் விற்றல் தொடர்பில் பாவனையாளர் அதிகார சபையினர் மற்றும் பொலிஸார் இணைந்து சுற்றிவளைப்பு கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதேபோல யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த வாரம் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. எனவே தற்போதைய சூழ்நிலையை பயன்படுத்தி சிலர் பொருட்களை அதிகளவில் கொள்வனவு செய்து பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்யக்கூடும்.

எனவே அவர்களுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பினை வழங்கக் கூடாது அதாவது பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்பவர்களுக்கு பொதுமக்கள் உடந்தையாக இருக்கக் கூடாது என்றார்.

அவ்வாறு அவர்களிடமிருந்து பொருட்களை கொள்வனவு செய்வதில் மக்கள் அவதானமாக செயற்பட வேண்டும். மேலும் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு தேவையான எரிபொருளின் அளவு முன்னரை விட அதிக அளவில் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு கிடைப்பதாகவும் எனினும் மேலதிகமாக கிடைக்கும் எரிபொருள் எங்கே செல்கின்றது என்பது தெரியவில்லை என்றார். (ம-33)

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
சீட்டிழுப்பு இல : 1574
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2022.06.01
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,724,700/-
வெற்றி இலக்கங்கள் 02 37 70 73
ஆங்கில எழுத்து F

சனிதா Shanida
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.06.01
சீட்டிழுப்பு இல : 3909
வர்ணம் : நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,663,240/-
வெற்றி இலக்கங்கள் 06 16 24 53
ஆங்கில எழுத்து G
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/-
திகதி 2022-06-01
வெற்றி வாரம் 3460
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 04 06 07 36
மீனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,641,660/-

12 வசனா
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 07 17 25 49 54
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 924
வர்ணம் பச்சை
திகதி 2022.06.01 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 239,532,667/-
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1748
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2022.06.01
தினம் புதன்கிழமை
B 12 54 58 66
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,047,780/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்வாயில் சிறுமியின் சங்கிலி அபகரிப்பு

(கரணவாய்)

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சிறுமியின் கழுத்தில் உள்ள சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

அல்வாய் பகுதியில் நேற்று மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அல்வாய் மாதா கோவிலடிப் பகுதியைச் சேர்ந்த 12 வயதுச் சிறுமி ஒருவர் கடைக்குச் சென்ற போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சிறுமியின் கழுத்தில் உள்ள சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது: (ம-60)


SPOKEN WITH GRAMMAR
வகுப்புக்கள்

- 2022 க.பொ.த (சா/த) மாணவர்கள்,
- பல்கலைக்கழக மாணவர்கள்,
- அரசபணி உத்தியோகத்தினர்கள்,
- வெளிநாட்டில் உயர்கல்வியை தொடர விரும்புபவர்கள்,
- ஒவ்வொரு பிரிவினர்களுக்கும் தனித்தனி வகுப்பு ஒழுங்குகள். (C-4409)

அனுமதிகள்/பதிவுகளுக்கு:
WEC COLLEGE
புதிய உயர்கல்லூரி வளாகம்
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
0779265447, 0217200989
கிளை: சங்கத்தானை, சாவகச்சேரி

A/L 2024 கணக்கீடு
பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்
யாழ். நகரின் முன்னணி ஆசிரியர்
திரு.க.பா.பாலகஜன் (Tutorial staff)
B.com(Jaf), H.N.Dip-in ACC (ATF)
Dip in Ed(ousl), M.Com(Hons)Acc.spl
KBK ACCOUNTING COLLEGE

| சுவாமியார் வீதி கொழும்புத்துறை | பலாலி வீதி, கந்தர்மடம் |
|---|---|
| சனி, ஞாயிறு 2.00–3.00pm | செவ்வாய், வெள்ளி 5.30–7.00pm |
| 4.6.2022 சனி 2pm | 7.6.2022 செவ்வாய் 5.30pm |

(11656)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (11698)
076 825 7716 (ஆகாஸ்)

TECHNO WORLD
தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.
A/L 2024
தொழினுட்ப பிரிவு
- பொறியியல் தொழில்நுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, விவசாயம், புவியியல், ஊடகக்கல்வி, கணிதம் (7), சித்திரம்

திகதி:- 05.06.2022
ஆரம்ப நேரம் - 9.00 am
(4408)
Call Now: 077 017 5346

A/L - 2024
ஆரம்பம் : 5.6.2022 காலை 9
வர்த்தகம்
Acc - D.Sam
B.st - T.S.ரிசி
ECO - S.S.சிறி
கலை
Tam. - R.S.சந்திரசேகர்
Hin - P.ஜோதீஸ்வரன்
His - M.பத்மன
Geo - N.பாபு
P/S - K.S.இளங்கோ
Log - E.S.பவன்
Agr - V.சசி
Chr. - M.றீபன்
Dra - K.மங்களேஸ்
Med - K.V.நவநீதன்
ICT - N.நம்பி
H.Sci - V.சசி
(11659)
தொழில்நுட்பம்
Sci.Tech - S.தயாபரம்
Boi.Tech - K.ஜெனா
Eng.Tech - N.ரஜிந்தன், S.சத்தியதாஸ்
DMI Jaffna 077 848 0604

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)
- A32, A9 இணையும் பிரதான வீதியில் (றவுண்டப் வோட்)
- A9 பிரதான வீதியில் இருந்து 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.

தரகர் தேவையில்லை
பார்வையிடும் நேரம்
காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை
(11703)
077 814 7389,
077 241 7589 - ஜெயம்

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 60 பரப்பு காணி விற்பனைக்கு
- A9 வீதியிலிருந்து இரண்டாவது காணி 100 m தூரம்
- கைதடி வழி பிள்ளையார் கோயிலில் இருந்து 100 m தூரம்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- நன்னீரூற்று.
- கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் 300 m தூரம்
- மூன்று வழிப் பாதை மேட்டுநிலம்
- கைதடி சந்தி 500 m தூரம்
- 2 ½ பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்

பார்வையிடும் நேரம்
காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை
ஒரு பரப்பின் விலை - நான்கு இலட்சம்
தொடர்பு:- 077 623 4204,
077 288 0152, 076 436 5814
(11677)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

NEC
மணிக்கூட்டு வீதி, யாழ்.நகர்
A/L 2024
ஆரம்பம்:- 03.06.2022 வெள்ளி
காலை 9.00 மணி
வர்த்தகப் பிரிவு
கணக்கீடு - K.பாலகஜன்
பொருளியல் - S.ஜெயக்குமார்
வணிகக்கல்வி - S.K.பாலசபேஷ்
ICT - V.நிரோஜன்
கலைப் பிரிவு
தமிழ் - T.S.குகன்
அளவையியல் - S.பவன்
புவியியல் - S.சபரிதன்
அரசியல் - N.பாபு
வரலாறு - N.S.தர்மீகன்
இந்து நாகரிகம் - K.கமலதாஸ்
ஊடகவியல் - M.Y.கோணேஸ்
ICT - V.நிரோஜன்
கிறிஸ்தவம் - T.மயூரன்
விவசாயம் - M.H.நிரோஜன்
நாட.அரங்கியல் - I.பிரபா
கணித உயிரியல் பிரிவு
பௌதிகவியல் - A.கபில்
இரசாயனவியல் - A.அரவிந்தன்
இணை.கணிதம் - B.மயூரன்
உயிரியல் - S.R.கண்ணா
(11700)
புதிய அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
T.P: 076 [illegible]0999/076 166 1986

மோட்டார் சைக்கிள்
விற்பனை
Yamaha Mate 50
சிவப்பு மொடல் விற்பனைக்கு
தொடர்புகளுக்கு (C-4396)
077 357 3055

நாவலர்
கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.
A/L 2024
கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம்
03.06.2022 வெள்ளி காலை 9.00
கலைப்பிரிவு
தமிழ் - A.K.கீர்த்திராஜன்
அளவையியல் - P.கமல்
இந்து நாகரிகம் - K.கமலதாஸ்
புவியியல் - S.P.கரன்
அரசியல் - S.தாரகன்
வரலாறு - L.சுகந்தன்
ஊடகவியல் - M.கோணேஸ்
ICT - S.விதுஷன்
கிறிஸ்தவம் - M.மயூரன்
(11699)
வர்த்தகப் பிரிவு
கணக்கீடு - V.தமிழ்ஈசன்
பொருளியல் - M.விஜிதன்
வணிகக்கல்வி - P.கோபிதன்
புதிய அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
T.P:-076 166 1986

யாழ்ப்பாணத்தில் படிப்பு
கனடாவில் வேலை
- PROFESSIONAL COOK
- RECEPTIONIST
- ROOM ATTENDANT
- ROOM SERVICE SUPERVISOR


(C-4410)
போன்ற HOTEL MANAGEMENT துறைகளில் கல்வி கற்று கனடாவில் வேலைவாய்ப்பினையும் பெற்றுக்கொள்ளலாம்
அடிப்படை தகுதி- 40 வயதுக்குட்பட்டவர்கள்.
O/L சித்தியடையாதவர்கள் கூட விண்ணப்பிக்கலாம்
சனி,ஞாயிறு வகுப்புக்கள் IELTS CLASSES
CIMS COLLEGE 0777-068-777

CANADA, UK
STUDENT VISA, WORK PERMIT
எடுப்பதற்கு தேவையான
IELTS


- WEEKDAY CLASSES
- WEEKEND CLASSES
- PERSONAL CLASSES
- ONLINE CLASSES
- EVENING CLASESS
- GROUP CLASESS

ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு இல்லாதவர்களுக்கு ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும். (C-4410)
CIMS COLLEGE 0777-068-777


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org